# சிந்திக்க செயற்பட




வே.இறைபிள்ளை
இ.அருணாசலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க
# செயற்பட

(வினா விடை பகுதி - 1)

தமிழ்க் காவலர் வே.இறைபிள்ளை
இரஞ்சிதமலர் அருணாசலம்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம்.
பொன்னம்பலம் அறக்கட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் பற்றிய விபரங்கள்


| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | தி.அ.2043 (2012) |
| நூற்பெயர் | : | சிந்திக்க செயற்பட |
| உரையாசிரியர் | : | வே.இறைபிள்ளை, இ.அருணாசலம் |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| பக்கங்கள் | : | 64 |
| அச்சிட்டோர் | : | வாணி கணினிப் பதிப்பகம், எண்.79, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. |


## உசாத்துணை நூல்கள்


1. தமிழ்க்கடல் அலை ஓசை பரவும் தமிழ்மாட்சி - பேராசிரியர் அன்பழகன்
2. தமிழா தமிழா - முனைவர் மலையமான்
3. கழக வினா விடை - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
4. தமிழின் சிறப்பு
5. இளங்கோவும், சிலம்பும்
6. அறிவுக்கு உணவு } - முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விஸ்வநாதம்
7. தமிழ் முழக்கம் - பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரையார்
8. தமிழர் வரலாறு - மொழிஞாயிறு தேவநேயப் பாவணர்
9. தமிழ் உணர்ச்சி, தமிழ் ஆட்சி தமிழ் வளர்ச்சி } - பொன்.கோதன்டராமன் (பொற்கோ)
10. தமிழ்நெறிக் கரணங்கள் - செந்தமிழ் அந்தனர் இரா.இளங்குமரனார்
11. ஔவையார் - தமிழண்னல்
12. இலக்கிய வரலாறு - பேராசிரியர், புலவர் சோம இளவரசு
13. பைந்தமிழ்ச் சோலை - கவியோகி சுத்தானந்த பாரதியார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## படையல்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தை
தொடக்கி வைத்த முன்னை நாள்
அரச ஆட்சியர் மக்கள் மாமணி
கந்தையா பொன்னம்பலம் அவர்களுக்கு
அவர்தம் இணையடி போற்றி வணங்கி
இந்த ஏட்டினை படைத்து மகிழ்கின்றோம்.

**வே.இறைபிள்ளை**
**இ.அருணாசலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மாமணி பொன்னம்பலம்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்னும் வள்ளுவன் வாக்குக்கு இணங்க புகழொடு தோன்றி புகழுடன் வாழ்ந்து இன்றுவரை மக்கள் மனதில் நீங்காது நிலைத்திருப்பவர் மக்கள் மாமணி பொன்னம்பலம்

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய பொன்னம்பலம் தனது விவசாயப் பட்டப்படிப்பை இந்தியாவில் உள்ள பூனா பல்கலைக் கழகத்தில் நிறைவாக்கிய பின் ஆசிரியராக ஒரு வருடம் பணியாற்றினார்.

1962ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நாள் முதலாகப் பல்வேறு பதவிகளை வகித்தார். காணி அபிவிருத்தி உதவி ஆணையாளர், மாவட்ட காணிப் புனரமைப்பு அதிகார சபையின் செயலாளர், முதன்மை நிறைவேற்று அலுவலர், நீரியல் அளவீட்டு குழுவின் செயலாளர், சீனிக் கூட்டுத்தாபனத்தின் குடியேற்றத் திட்டமிடலாளர், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் அரச ஆட்சியர் என அவர் ஆற்றிய பணிகளில் தனக்கென ஒரு முத்திரையை பதித்துக் கொண்டவராவார்.

இவர் அரச ஆட்சியராக கடமையாற்றிய காலங்கள் போர் மேகங்கள் சூழ்ந்திருந்த மிக நெருக்கடியான காலகட்டங்கள் ஆகும். இந்தக் காலகட்டங்களில் மிகவும் துணிச்சலோடு செயலாற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் இன்றியமையாத தேவைகளைத் தங்குதடையின்றி நிறைவேற்றினார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனுக்குடன் நிவாரணப் பொருள்களையும், எரிபொருள்களையும் வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்தார்.

காணி அபிவிருத்தி அலுவலராக கடமையாற்றிய காலப்பகுதியில் முழங்காவில், ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு, திருவையாறு, விசுவமடு ஆகிய இடங்களில் குடியேற்றத் திட்டங்களை நிறுவி மக்களின் ஒளிமயமான வாழ்வுக்கு வழி வகுத்தார். திருவையாறு படித்த வாலிபர் திட்டம், மிருசுவில் படித்த மகளிர் திட்டம் என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

காட்சிக்கு எளியவர். விவசாயிகளின் இணை பிரியா நண்பன், சுடு சொல் அறியா அன்சொல்லாளன், எல்லோருக்கும் முன்மாதிரியானவர், தனது பணியாளர்களைத் தன்வசப்படுத்திப் பணியில் ஈடுபடுத்துபவர், ஏழைகள் மீது இரக்கம் காட்டுபவர், காலமறிந்து உதவுபவர், துணிச்சலான முடிவுகளை எடுப்பவர் என்றெல்லாம் இன்றுள்ள அரச பணியாளர்களும் பொதுமக்களும் அவரைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

மக்கள் நலத்திட்டங்களிலும் மனித நேயச் செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்தவர். மாலை வேளைகளில் அரச அலுவலர்களுடன் துடுப்பாட்டம், பூப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களிலும் ஈடுபடுவார். கடும் பணி செய்ய வேண்டிய வேளைகளில் கடின உழைப்பு, பொழுதுபோக்கு என்பது அவரது தாரக மந்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் விளையாட்டும் வன்னி மக்களின் அகவாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் அவசியம் என்பதை உணர்ந்து அவற்றுக்கான நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். குறிப்பாக மாணவர்களின் உயர் கல்வி மேம்பாட்டு நிதியத்தை உருவாக்கி இளஞ் சமுதாயத்தினர் வளம் காண வழிவகுத்தார். 'உண்மையும் நேர்மையும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் வாழவேண்டும்' என்பது இவரின் குறிக்கோளாகும். கிளிநொச்சித் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவிக்கும் கருத்தைக் கூறிய போது ஆதரவு நல்கித் தொடங்கி வைத்தார்.

இவரது செயற்கரிய பணிகளை பாராட்டி 2005ஆம் ஆண்டு கிளிநொச்சி தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த திருக்குறள் மாநாட்டில் அன்னாருக்கு "மக்கள் மாமணி விருது" வழங்கிக் நன்மதிப்பளிக்கப்பட்டார்.

இன்று இவரது பிள்ளைகள் இருவரும் முனைவர் பட்டம் பெற்று உயர் பதவிகள் வகிப்பதோடு, வெளிநாடுகளில் நிறைவாக வாழ்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவரது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளைக் காண்பதற்காக வெளிநாடு சென்று திரும்பி வந்தவுடன் வன்னிப் பெருநிலப் பரப்பில் ஏற்பட்ட யுத்த அழிவுகளால் மக்கள் அடைந்த சொல்லொணாத் துயரங்களையும் உறவினர்கள் மூலமும் நண்பர்கள் மூலமும் நேரடியாகவும் அறிந்ததன் காரணமாக ஆறாத் துயரில் மூழ்கினார். இதனால் வன்னிப் பெருநிலப் பரப்பு மக்களை மிகவும் நேசித்த பெருந்தகையாளரின் உயிர் அவரை விட்டுப் பிரிந்தது.

**தமிழன்பன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நூல்களைப் படிக்கும் செயற்பாடு அருகி வரும் இக்காலத்தில் படித்த நூல்களிலிருந்து தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், சங்கத்தமிழ் இலக்கியம், குமுகாய வளர்ச்சிக்கான பொதுவான தகவல்கள் ஆகியவற்றை எல்லாம் மாணவர்கள் இளைஞர்கள், இளைஞிகள் உட்பட ஏனையோர்க்கும் கொடுத்துவிட வேண்டும் என்று ஆழமாகவும், அழுத்தமாவும் எண்ணி இந்நூலை வினா விடையாக உருவாக்கி உள்ளோம்.

உலகத் தமிழர் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்ச் சங்கம் என இவ்வாறு தமிழ் மேம்பாட்டுக்காக சிறந்த நிறுவனங்கள் உருவாகி உள்ள இக்காலக்கட்டத்தில் தமிழ்மேம்பாட்டுக்கும், குமுகாய மேம்பாட்டுக்கும் நிலையான வலுவான அடித்தளம் வேண்டும் என்று நாம் எல்லோரும் விளைவது ஒரு இயற்கையான விருப்பம்.

எனவே தமிழ்மேம்பாடு, குமுகாய மேம்பாடு பற்றி முறையாகச் சிந்திக்கவும், நெடும்நோக்கில் வழிவகைகளை உருவாக்கி உறுதி-யோடு முன்னோக்கி செல்லவும் இந்நூல் குறிப்பிடத்தக்க அளவுக்கு உதவும் என்று நம்புகிறோம். இந்த நூலைப் படிக்கும் எல்லோருக்கும் இந்த நூலின் காரணங்களும் நோக்கங்களும் எளிதாக விளங்கும். இவற்றை மனத்தில் கொண்டு நாம் எழுதிய தகவல்களிலோ தகவல்களைச் சொன்ன முறைகளிலோ குறைபாடுகள் இருப்பின் பொறுத்தருள வேண்டுகிறோம்.

நீங்கள் படிக்க இருப்பது கட்டுரைகள் அல்ல வினா, விடை-களை படிப்பதாக எண்ணி படியுங்கள்.

இந்நூலை முன்னைநாள் அரச ஆட்சியர் மக்கள் மாமணி கந்தையா பொன்னம்பலம் அவர்களுக்கு படையல் ஆக்குவதில் பெரும்மகிழ்வடைகின்றோம். இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் அ.சண்முகதாசு அவர்களுக்கும், சிறப்புரை வழங்கிய திரு.மா.கணபதிபிள்ளை அவர்களுக்கும். இந்நூலை அழகுற அச்சிட்டு தந்த வாணி அச்சகத்தாருக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றி

தமிழ்க் காவலர்
**வே.இறைபிள்ளை**
நிறுவுனர் கிளிநொச்சி மாவட்ட
தமிழ்ச் சங்கம், கிளிநொச்சி.

திருவாட்டி.
**இரஞ்சிதமலர் அருணாசலம்**
ஆசிரியை
யெயந்தி நகர், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சிந்திக்கவும் பொது அறிவினை வளர்த்துக்கொள்ளவும் திரு.வே.இறைபிள்ளை அவர்களும், திருவாட்டி இ.அருணாசலம் அவர்களும் இச் சிறிய நூலை வெளியிடுகின்றனர். உலகளாவிய நிலையிலே வினாக்கள் பல அமைந்தாலும், தமிழ் மொழி, தமிழர் வரலாறு, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம் என்பன பற்றியே பெரும்பாலான வினாக்கள் அமைந்துள்ளன.

இத்தகைய நூல்கள் பல வெளிவரவேண்டும். நம்முடைய மாணவர்கள் நாளிதழ்களைப் படிப்பது இல்லை. பத்திரிகைகளைப் படிப்பதாலும், வானொலி-தொலைக்காட்சிச் செய்திகளைக் கேட்பதாலும் தமது பொது அறிவினை அவர்கள் வளர்த்துக்கொள்வதற்கு வாய்ப்புண்டு. ஆனால் அந்நிலை காணப்படாததால் இப்படியான சிறு கைநூல்களுடாக அறிவை மேம்படுத்தலாம்.

இவர்கள் இப்பணியைத் தொடர்ந்து செய்யவேண்டும் இவர்களுடைய இப்பணிக்கு நிதி மிகுந்தவர்கள் உதவவேண்டுமென அவர்களை அன்புடன் வேண்டுகிறேன். இவர்களை வாழ்த்தி இச்சிறு அணிந்துரையினை நிறைவுசெய்கிறேன்.

**பேராசிரியர் அ.சண்முகதாசு**
வாழ்நாட் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

கிளிநொச்சி தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு.வே.இறைபிள்ளை (பரமநாதபிள்ளை) அவர்களாலும், திருவாட்டி இ.அருணாசலம் ஆசிரியர் அவர்களாலும் வெளியிடப்படும் இந்நூல் தமிழ் மாணவர்களுக்குப் பயனுடைய வகையில் கேள்வி பதிலாக அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் இளம் உள்ளங்கள்அறிவை தேடுவதாக அமைந்திருக்கும் 5000ஆண்டுகளுக்கு முற்பட்ட கிரேக்க நாகரிகத்தின் முக்கிய சிந்தனையாளர்களாகக் காணப்படும் சோக்கிரட்டீசு, பிளேட்டோ, அரிச்டோட்டல் போன்றோர் தமது கற்பித்தல் முறையாக "வினா விடை" முறையையே தேர்ந்தெடுத்திருந்தனர். ஆழமாக, மனத்தில் உடனடி விளக்கத்தைத் தரக்கூடிய கற்பித்தல் முறை வினாவிடை முறைமை எனக் குறிப்பிடப்படுகின்றது. இந்த முறைமையில் தூய தமிழ்மொழி சார்ந்த பல்வேறுபட்ட வினாக்களை தொடுத்து அதற்குப் பொருத்தமான விடைகளையும் தந்திருக்கும் இவர்களுடைய முயற்சி பாராட்டுதற்குரியது.

வேற்றுமொழி நாட்டத்திலும் அடிமைச் சிந்தனையாலும், நிலைகுலைந்திருப்பவர்கள் தமிழர்கள். வங்கக் கவிஞர் தாகூர் கூறியதைப்போல "தாய்மொழியையும், அதன் சிறப்புமிகு இலக்கியங்களையும் மதிக்காது வேற்றுமொழிக்கு தம்மை அடிமையாக்கிக் கொண்டவர்கள் தமிழர்களைப் போல வேறு எந்த நாட்டிலும் இல்லை" என்ற இந்தக் குறிப்பையும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளனர். தமிழ்மொழியின் சிறப்பை பல்வேறு இடங்களில் கற்கமுடிந்தாலும் எல்லாத் தனித்துவங்களையும் மிகச்சிறப்பாக வெளியிட்டிருக்கும் நூல் இதுவாகும். சின்னஞ்சிறிய குழந்தைகளின் உள்ளத்தில் ஆழமாகப் பதியக்கூடியவிதத்தில் மிகச்சிறந்த மொழி நடையில் இந்நூலை ஆக்கித் தந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழிக்கு "செம்மொழி" என்ற சிறப்பு கிடைத்துள்ளது. தமிழ்மொழி உலகமெல்லாம் பரந்து வாழும் தமிழர்களால் பேசப்படுகின்றது. தமிழ்மொழி காலம் கடந்தும் வாழும் என்று முழக்கச் செய்வதனால் பயன் இல்லை தமிழ் தமிழாக பயன்படுத்தப்படல் வேண்டும். தமிழ்மொழி அதன் பண்பாட்டுபாங்கு மூலைமுடுக்கெல்லாம் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். தமிழ்மொழியில் பேசுதல் கௌரவம் என்ற வண்ணம் தமிழர்களிடம் உயிர்ப்புற்று நிற்றல் வேண்டும். பாரதி சொல்வது போல் "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதில் ஓர் மகிமையில்லை" என்ற பொன்மொழிக்கிணங்க நம்மை நாமே பெருமைப்பட்டுக்கொள்வதால் பயன் இல்லை. பிறநாட்டார் "வணக்கம்" சொல்லக்கூடிய அளவுக்கு ஆக்கமுள்ள இலக்கியங்களையும், செயற்பாடுகளையும் தமிழர்கள் ஆற்றுதல் வேண்டும். இத்தகைய ஆற்றுகைப் பெருமையினாலே தான் பண்டைத்தமிழர்கள் பார் புகழ்பெற்று நின்றனர். இவர்கள் குறிப்பிடும் போது "மண்ணைப் பேச வைத்தான் தமிழன்" அது கடமாக இசைத்து நிற்கின்றது. "நரம்பைப்பேசவைத்தான் தமிழன்" அது யாழாக ஒலிக்கின்றது. "தோலைப் பேசவைத்தான் தமிழன்" அது பறையாக முழக்கம் செய்கின்றது. "மரத்தைப் பேசவைத்தான் தமிழன்" அது புல்லாங்குழலாய் ஒலித்து நிற்கின்றது. மழையைப் பேசவைத்தான் தமிழன் அது சல்லாரியாய் தாளத்தைத் தருகின்றது. இதைப்போன்று இன்னும் பலவற்றை அதிசயமிருக்கத்தக்க முறையில் கண்டுபிடிக்கவேண்டிய பாரிய பொறுப்பு இளம் தலைமுறைத் தமிழர்களுக்கு விடப்பட்டிருக்கின்றது.

எதிர்கால இளம்சந்ததி தமிழ்மொழியில் சிறப்பாக துலங்கவேண்டும் என்பதற்காக தமிழ்சார்ந்த பல்துறை வினாக்களைத்தேடி அவற்றுக்கு முறையாக விடைகளையும் தந்திருக்கும் இவர்களுடைய முயற்சி தமிழ் உள்ளளவும் பாராட்டப்படும். தமிழைச் சரியாக உச்சரிக்கவும், தமிழைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாக எழுதவும், தமிழைச் சரியாகப் பேசவும், தமிழனாக வாழவும் "கூச்சப்படாத" ஒரு குமுகாயத்தை உருவாக்குவதற்கு தன்னாலான பங்களிப்பை நல்கவேண்டும் என்பதில் இவர்களின் இச்சிறிய நூல் மைல்கல்லாக அமையலாம்.

தமிழர் ஒவ்வொருவரின் கைகளிலும் இந்நூல் காணப்படல் வேண்டும். தமிழ்நூல் நிலையமெங்கும் தமிழ்ப் பள்ளிகள் தோறும் இந்நூல் பயன்படுத்தப்படல் வேண்டும். நம் சமகால சம்பவங்களை மாத்திரமல்லாமல் வரலாற்றுச் சம்பவங்களையும் தொகுத்துத் தந்திருக்கும் இந்நூலின் சிறப்பு காலம்கடந்தும் புகழப்படும். பிறந்த ஒவ்வொரு தமிழனும் தமிழுக்கு நான் என்ன செய்தேன் என்ற வினாவுடன் ஏதாவதொன்றை விட்டுச்செல்லவேண்டும். அதுதமிழனை "தக்காராய்" காட்டிநிற்கும். முகங்கள் கடந்தும் அவர்கள் பெயர்கள் உச்சரிக்கப்படும். இவர்களின் முயற்சி தொடர வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறைவன் நீண்ட வாழ்நாளையும், நிறைவான உடல் நலத்தையும், தொடர்ந்து ஆராய்ந்து எழுதும் திறனையும் அருளவேண்டும் என்று இறைஞ்சுகின்றேன். இவர்கள் இந்நூலாலும் இனி வரும் நூல்களாலும் தமிழ் உலகமெங்கும் புகழ்பரப்பி நிற்பர்.

நன்றி.

**மா.கணபதிப்பிள்ளை**
தலைவர்
கல்விக்குழு,
கொழும்பு தமிழ்ச்சங்கம்
துணை முதல்வர்,
றோயல் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்திக்க செயற்பட

**01. தமிழ் நெறியில் ஆண்டு அளவையினைப் பொறுத்து எடுக்கும் விழாக்கள் எவை?**

| | |
|---|---|
| 25ஆம் ஆண்டு நிறைவில் | - வெள்ளிவிழா |
| 50ஆம் ஆண்டு நிறைவில் | - பொன்விழா |
| 60ஆம் ஆண்டு நிறைவில் | - மணிவிழா |
| 70ஆம் ஆண்டு நிறைவில் | - முத்து விழா |
| 75ஆம் ஆண்டு நிறைவில் | - பவளவிழா |
| 80ஆம் ஆணடு நிறைவில் | - ஆயிரம் பிறை கண்டவிழா |
| 100ஆம் ஆண்டு நிறைவில் | - நூற்றாண்டு விழா |

**02. எல்லை ஒன்று இல்லாது எங்கும் புகழ்பரப்பும் மணம் ஒன்றே ஒன்று அது எது?**

திருமணம் (கலியாணம் -வட சொல்)

**03. அனைத்துலகும் கண்டு வியந்து போற்றும் பெருமைமிக்க தமிழினத்தின் பொற்காலமாக திகழ்ந்த காலம் எது?**

சங்ககாலம்

**04. உலகப் பெண்பாற் புலவர்களிடையே சிறப்பிடம் பெற்ற தமிழ்ப் பெண்பாற் புலவர் யார்?**

ஔவையார்

**05. உலகத்தின் எந்த பெண்பாற் புலவர்களுடன் தமிழ் ஔவையை ஒப்பிட்டு திறனாய்வு செய்துள்ளனர்?**

கிரேக்கப்புலவர் சாபோ சீன பெண்பாற் கவிஞர் லிகிங்சான் (கி.பி.11) பெயின் பெண்பாற் கவிஞர் வல்லாவை (கி.பி.11)

**06. அமெரிக்க நாட்டின் மெக்சிக்கோவின் பிரமாண்டமான அரசு பொது உயர்நிலைப் பள்ளியில் வானியல் துறையின் உலகளாவிய கணினிக்கல்வி நிலையத்தில் எழுதப்பட்ட ஔவையாரின் பா எது?**

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு"

What we have learn like a hand full of earth. What we have yet to be learn is like a whole world. (Avvaiyar)

**07. உலகத்தின் ஒப்பற்ற செல்வங்களில் ஒன்றாகவும் தமிழகத்தின் செல்வமாகவும் தமிழனின் சொந்தச்சொத்தாகவும் இருக்கும் நூல் எது? அதனை இயற்றியவர் யார்?**

திருக்குறள், தெய்வப்புலவர் திருவள்ளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. உலகில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்ற நூல்களில் திருக்குறள் எத்தனையாம் இடத்தைப் பெற்றுள்ளது?**

3வது இடம், உலக இலக்கிய நூல்களில் முதலாவது

**09. திருக்குறள் ஓதுவதால் பெறும் பயன்கள் எவை?**

திருக்குறள் ஓதினால் உயர்வு கிட்டும்.
திருக்குறள் ஓதினால் பண்பாடு தானே வரும்.
திருக்குறள் ஓதினால் மனமாசு ஒழியும்.
திருக்குறள் ஓதினால் நோய் நொடி நீங்கும்.
திருக்குறள் ஓதினால் உயிர் தளிர்த்து நீடுழி வாழலாம்.
திருக்குறள் ஓதினால் தெய்வநிலை எய்தலாம்.

ஆதலால் திருக்குறளை ஓதிச் சீரும் சிறப்பும் பேறும் பெருமையும் வாழ்வும் வளமும் பெற்றுச் சிறப்பெனும் செம்பொருள் கண்டு பேரின்பப் பெருநிலை எய்தலாம்.

**10. தமிழன் யார்?**

தமிழன் ஒரு தனி இனத்தவன். பிற இனங்களின் கலப்பால் பிறந்தவன் அல்லன். தான் தோன்றிய இடத்திலேயே தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்து வருபவன். தனக்கென்று தனிப்பட்ட பழக்க வழக்கங்களும் கொள்கைகளும் உடையவன்.

ஆரியர் போன்ற அயல் நாட்டினர் இந்தியாவிற்குள் புகுவதற்கு முன்னரே தென்னிலங்கையின் தெற்கு முனையிலிருந்து வடக்கு இமயமலை வரை பரந்து விரிந்து விளங்கிய நிலப்பகுதியெங்கும் பரவி வாழ்ந்த பழம் பெரும் இனத்தவன்.

**11. தமிழன் என்று யாரை அழைக்கலாம்?**

அன்றாட வாழ்வில் தமிழைப் பேணி வளர்ப்பவனையே தமிழன் என்று கூறலாம்.

**12. மக்களைப் பொறுத்தே ஒரு நாட்டின் பெருமையும் சிறுமையும் ஏற்படுகின்றது என்பது தமிழருடைய கொள்கையாகும். இக் கொள்கையை வற்புறுத்தும் ஔவையாரின் பாடல் எது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

**13. தமிழ்த் தென்றல், தமிழ்ப்பெரியார், தமிழ்முனிவர் என எல்லோரினாலும் போற்றப்பெற்றவர் யார்?**
திரு.வி. கலியாண சுந்தரனார்.

**14. இருபதாம் நூற்றாண்டின் சிந்தனைப் போக்கை மாற்றிய தமிழ்ப் பெரியார்கள் யார்?**
பாரதியார், பாரதிதாசன், மறைமலையடிகள், அண்ணா, பெரியார் ஈவெரா, பாவாணர், கல்கி.

**15. நித்தம் தமிழ் வளர்த்த மூன்று குலத்தமிழ் மன்னர் யார்?**
சேரர், சோழர், பாண்டியன்

**16. சேரநாட்டு மாளிகையில் வீரமஞ்சத்தில் கண்ணுறங்கிய தமிழ்ப் புலவர் யார்? அவருக்கு கவரி வீசி நின்ற மன்னன் யார்?**
புலவர் மோசீகீரனார் - சேர மன்னன் இரும்பொறை

**17. பழைய ஏட்டுச் சுவடிகளையும் சிறந்த இலக்கண நூல்களையும், இலக்கிய நூல்களையும் முதன் முதலாக அச்சிட்டவர் யார்?**
யாழ்ப்பாணத்தில் தோன்றிய சி.வை. தாமோதரம் பிள்ளை.

**18. தமிழ்மொழிக்கும் சிவநெறிக்கும் அரும் பெரும் தொண்டாற்றிய இலங்கையர் யார்?**
ஆறுமுகநாவலர்

**19. இசைத்தமிழருக்கு விழுமியத் தொண்டு செய்த இலங்கையர் யார்?**
முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள்.

**20. இவர் பழந்தமிழ் நாட்டின் சிறந்த இசைக்கருவியாக விளங்கிய யாழின் திறத்தையும் தமிழ் இசையின் நலத்தையும் ஆராய்ந்து எழு-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திய நூலின் பெயர் என்ன?**

யாழ்நூல்

**21. தமிழ்மொழியின் சிறப்புப் பற்றி பாரதியார் பாடிய பாடல்வரியைக் குறிப்பிடுக?**

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்.

**22. தமிழரின் தொன்மையை உலகுக்கு அறியத்தந்தவர் யார்?**

கால்டுவெல்

**23. தனித் தமிழ்மொழிக்கு வித்திட்டவர் யார்?**

பரிமாற் கலைஞர் (சூரிய நாராயண சாஸ்திரியார்)

**24. தனித் தமிழ் இயக்கத் தந்தை யார்?**

மறைமலையடிகள் (சுவாமி வேதாசலம்)

**25. குமரிக் கண்டம் தன்னகத்தே கொண்ட நிலப்பரப்புக்கள் எவை?**

கிழக்கில் அவுத்திரேலியாவையும் மேற்கில் தென்னாபிரிக்காவையும் வடக்கில் இந்தியாவையும் கொண்டது.

**26. உலகில் முதன்மொழி தமிழ். உலகில் முதல் மாந்தன் தமிழன் என நிறுவியது யார்?**

மொழி ஞாயிறு தேவ நேயப் பாவாணர்

**27. உலகம், ஞாலம் என்பதன் பொருள் என்ன?**

உருண்டு திரண்டதால் உலகம்
அண்டவெளியில் ஞாலுவதால் (தொங்குவதால்) ஞாலம்.

**28. மக்கள் முதன் முதல் தோன்றிய இடம் எது? அது எவ்வாறு அழைக்கப்பட்டது?**

முதன் முதல் தோன்றியது ஞாலத்தின் நடுப்பகுதி. அந்த நடுப்பகுதியே பண்டு குமரிக்கண்டம் (இலெமூரியா) என அழைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29. இயல்பாகத் தோன்றிய "இயன்மொழி தமிழ்". அதற்கு பதினாறு பண்புகள் தேவை அவையாவை?**

தொன்மை, இயன்மை, தூய்மை, முன்மை, வியன்மை, வளமை, தொன்மை, இயன்மை, இளமை, இனிமை, தனிமை, ஒண்மை, இறைமை, செம்மை.

**30. அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் நடத்திய உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடங்கள் எவை?**

| | |
|---|---|
| முதலாவது மாநாடு | - மலேசியா 1966 |
| இரண்டாவது மாநாடு | - தமிழ்நாடு 1968 |
| மூன்றாவது மாநாடு | - பரிஸ் 1970 |
| நாலாம் மாநாடு | - யாழ்ப்பாணம் |
| ஐந்தாம் மாநாடு | - மதுரை தமிழ்நாடு 1983 |
| ஆறாம் மாநாடு | - மலேசியா 1986 |
| ஏழாம் மாநாடு | - மொரிசியசு 1989 |
| எட்டாம் மாநாடு | - தஞ்சாவூர், தமிழ்நாடு 1995 |

**31. தூயதமிழ்ச் சொற்களால் ஆக்கப்பெற்ற பழந்தமிழ் நூல்கள் இரண்டைக் குறிப்பிடுக?**

01. தொல்காப்பியம் 02. திருக்குறள்

**32. தமிழ் இசை மூல மூவர் யார்?**

மாரிமுத்தாப்பிள்ளை, அருணாச்சலக் கவியராயர், முத்துத்தாண்டவர்

**33. இலங்கையைச் சேர்ந்த தலைசிறந்த இலக்கிய விமர்சகர் யார்?**

முனைவர் க.கைலாசபதி

**34. கால தேச வரையறையின்றி உலகினர்க்கெல்லாம் தனி அலகாக (நூல்) இருக்கும் நூல் எது?**

திருக்குறள்

**35. உலகினர்க்கெல்லாம் தனிநூலாய் விளங்கும் திருக்குறளை இயற்றிய புலவரை பாரதியார் மனமுவந்து பாடிய பா என்ன?**

வள்ளுவன் தன்னை உலகினுக்கே
தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**36. "சங்கத் தமிழைப் படியாதவன் பங்கத்தமிழன்" எனக்கூறியவர் யார்?**

மூதறிஞர் வ.சு.ப.மாணிக்கம்

**37. பின்வரும் புகழ்கொண்ட பெயருக்குரியவர்கள் யாவர்?**

01. பேரறிஞர் - சி.ந.அண்ணாத்துரை
02. தமிழ்த்தூது - அருட்தந்தை தனிநாயக அடிகள்
03. முத்தமிழ் வித்தகர் -விபுலானந்த அடிகள்
04. தமிழ்த் தென்றல் - வி.கலியாண சுந்தரனார்
05. மூதறிஞர் -இராயாயி வ.சு.ப.மாணிக்கனார்
06. புரட்சிக்கவிஞர் - பாவேந்தர் பாரதிதாசன்
07. உணர்ச்சிக்கவிஞர் - காசி ஆனந்தன்
08. தேசியக்கவிஞர் - பாரதியார்
09. மொழிஞாயிறு - தேவநேயப்பாவாணர்
10. தனித்தமிழ்த் தந்தை - மறைமலையடிகள்
11. பாவலரேறு - பெருஞ்சித்திரனார்
12. பன்மொழிப்புலவர் - கா.அப்பாத்துரையார்
13. முத்தமிழ்க்காவலர் - கி.ஆ.பெ.விசுவநாதம்
14. கலாயோகி - ஆனந்தக் குமாரசுவாமி
15. தமிழ்மா முனிவர் - தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

**38. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவ ஊற்றுக்கண்ணாக இருந்தவர் யார்?**

அருட்தந்தை தனிநாயக அடிகள்

**39. தமிழ் எழுத்து வடிவத்தில் இன்றியமையாத சில திருத்தங்களை கொண்டு வந்த பெரியார் யார்? அத்திருத்தங்கள் எவை?**

வீரமாமுனிவர் தந்தை ஈ.வெ.ரா பெரியார்

வீரமாமுனிவர் கொண்டு வந்த திருத்தம் , - 'எ', 'ஒ' - 'ஏ', 'ஓ'- கெ், கே், செ், சொ திருத்தம் -கே, கொ, சே, சொ, சோ பெரியார் கொண்டு வந்த திருத்தங்கள்

- னை, ணை, ளை, லை, ணா

**40. தமிழில் தோன்றிய ஒரு முழுமையான துன்பியல் நாடகக் காப்பியம் எது?** சிலப்பதிகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**41. தமிழில் தோன்றிய முதற் காப்பியம் எது?**
சிலப்பதிகாரம்

**42. தமிழில் தோன்றிய இரட்டைக்காப்பியங்கள் எவை?**
சிலப்பதிகாரம், மணிமேகலை

**43. சிலப்பதிகாரம் காலத்தை வென்று விளங்கும் காப்பியமாக எவ்வாறு விளங்குகிறது?**
வாழ்வியல், அரசியல், பொருளியல், வரலாற்றியல், கலையியல் முதலியவற்றை கொண்டுள்ளமையால் காலத்தை வென்று வாழ்கின்றது.

**44. சிலப்பதிகாரம் வழி நூலா? முதல் நூலா?**
முதல் நூல்

**45. கடவுள் வணக்கத்தில் தொடங்காமல் இயற்கை வணக்கத்தைப் போற்றித் தொடங்கிய நூல் எது?**
சிலப்பதிகாரம்

**46. முத்தமிழ் விரவியதும் தமிழில் தோன்றியதுமான காப்பியம் எது?**
சிலப்பதிகாரம்

**47. திருக்குறளால் தோன்றிய நூலகம் எது?**
"சரசுவதி மால்" என்னும் கலைக் கருவூலம்

**48. திருவள்ளுவர் ஆண்டைத் தொடக்கி வைத்தவர் யார்?**
மறைமலையடிகள். தி.ஆ.1966 சுறவத் திங்கள் 05ம் நாள் (18.01.1935)

**49. ஈழத்தில் குறளாயத் தமிழ்த் திருமணங்களை நடத்தி வைக்கும் நிறுவனம் எது? அதன் நிறுவுனர் யார்?**
கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம், திரு.வே.இறைபிள்ளை

**50. உலகத் தமிழ்மறைக் கழகத்தை தோற்றுவித்தவர் யார்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைவர் அறிஞர் கா.போ.இரத்தினம்

**51. குறளாய நிறுவுனர் - அமைப்பாளர் - நெறியாளர் யார்?**
அரசவேலா மாணிக்கனார்

**52. திருக்குறள் தமிழ் மறை எனப்பட்டதேன்?**
வேண்டாநெறி புகா வகையால் பாதுகாக்கும் நூலாக இருப்பது. தமிழ் நெறியில் தோய்த்து முழுதுற ஆய்ந்த நூலாக இருப்பதால் தமிழ் மறை எனப்பட்டது.

**53. திருக்குறளின் தனிச் சிறப்புக்கள் பல, அவற்றுள் தலையாய ஒன்றைக் கூறுக?**
பிறப்பில் ஏற்றத்தாழ்வு காணாத ஒரு சமனிலைப் பார்வை உடைமையாகும்.

**54. தமிழுக்கு இனம் மூன்று அவை எவை?**
வல்லினம் (த)· மெல்லினம் (மி)இடையினம் (ழ)

**55. ஆடவர், பெண்டிர் சமனிலை கருதுவது திருக்குறள், இதனை நன்கு விளக்கும் அதிகார வைப்பு ஒன்றைத்தருக?**
வாழ்க்கைத்துணை நலம்

**56. தேம்பாவணி என்ற மிகச்சிறந்த தமிழ்க்காப்பியத்தை இயற்றியவர் யார்?**
வீரமாமுனிவர்

**57. தமிழ் மொழியிலுள்ள திறமான புலமைதனை வெளி நாட்டவர் வணங்கும்படியான முயற்சியை முதலில் செய்தவர் யார்?**
வீரமாமுனிவர்

**58. ஈழத்தில் நாட்டுக்கூத்திற்கு புத்துயிர் அளித்தவர் யார்?**
பேராசிரியர் சு.வித்தியானந்தன்

**59. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் யார்?**
முனைவர் சு.வித்தியானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**60. முத்தமிழும் முழங்கும் ஒரு குடிமக்கள் காப்பியமாய்த் தமிழின் காப்புக் கருவூலமாக திகழ்வது எது?**
சிலப்பதிகாரம்

**61. "நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்" எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வணக்கப்பாடலை பாடியவர் யார்?**
மனோன் மணியம் சுந்தரனார்

**62. தமிழ்மொழியின் செம்மொழி உரிமையை எவை பறித்துக்கொண்டன?**
குமரிப்பட்டர் காலத்தில் நிறைவு பெற்ற வேதமொழி இயக்கமும். நவீன காலத்துத் தவறான வரலாற்று அணுகுமுறையுமாகும்.

**63. திராவிட பண்பாட்டுச்சின்னங்கள் எங்கெங்கு உள்ளன?**
கிழக்கு நில நடுக்கடல் பகுதியிலும் சைபீரியா, இத்தாலி, மேற்கு, ஆசியா.

**64. குமரிக்கண்டம் எங்கெங்கு பரவிக்கிடந்தது?**
வடக்கில் தக்கணம் முதல் தெற்கில் இந்துமாகடல் பகுதிகள-ிலும், கிழக்கின் சாந்தாத்தீவு வரையிலும் மேற்கில் மடகாசுக்கர் வரையிலும் பரவிக்கிடந்தது.

**65. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்றநூலை எழுதியவர் யார்?**
கால்டுவெல் (எழுதப்பட்டது 1856)

**66. கம்பராமாயணத்தின் கவிதை நெறிக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த காவியம் எது?**
சிந்தாமணி

**67. எழுத்தில், தமிழ்த்தாய்க்கு செய்யவேண்டிய தலையாய கடமைகள் என்ன?**
வடஎழுத்துக்களை நீக்கி எழுதுதல்
ஸ, ', ஹ, ஸ்ரீ, ஜ, ஷ,

**68. பண்டைத்தமிழரின் தாயகம் எது?**
குமரிக்கண்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**69. உலகின் தொன்மையான மொழிகள் எவை?**

எபிரேயம், கிரேக்கம், இலத்தீன், தமிழ், சீனம்

**70. இந்திய மொழிகளில் முதன் முதலில் அச்சுப்பொறியில் பிரசுரமாகிய மொழி எது?**

தமிழ்மொழி

**71. தமிழுக்கு இந்தப்பெருமையை வழங்கியவர்கள் யார்?**

மேலைத்தேச கிறித்தவ மிசனரிமார்

**72. தமிழ் இதழியலில் நகைச்சுவைக்கென வெளியிடப்பெற்ற இதழ்கள் எவை?**

சிரித்திரன், கலகலப்பு, சுவைத்திரன்

**73. தமிழ்ச்சஞ்சிகைப் பரப்பில் முதன்முதலில் வெளிவந்த சஞ்சிகைஎது?**

ஆனந்த விகடன்

**74. தமிழ் இசையை மீட்கவும் பரப்பவும் என முதன் முதலில் தமிழ் இசைக்கல்லூரியை நிறுவியவர் யார்?**

அண்ணாமலைச் செட்டியார் (1929)

**75. தமிழ் இசைஇயக்கத்தின் வெற்றிக்கு கால்கோள் விழாவாக முதன்முதலில் இசைமாநாடு எங்கு நடைபெற்றது?**

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1941

**76. பண்டைத்தமிழகத்தில் அரசர்கள் கலந்தாலோசிக்கவென வைத்திருந்த குழுக்கள் எவை?**

**01.எண் பேர் ஆயம் குழு**

1.கரணத்தியலவர்

2. கரும விதிகர்

3. கனகச்சுற்றம்

4. கடைக்காப்பாளர்

5. நகர மாந்தர்

6. படைத்தலைவர்

**02.ஐம்பெருங்குழு**

1.மந்திரிமார்

2.கணியர்

3.சேனைத்தலைவர்

4.தூதுவர்

5.சாரணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. யானை வீரர்
8. குதிரை வீரர்

**77. சங்ககாலக் கலைகள் எவை?**

இசை, நாடகம், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை

**78. நால்வகை இசைக்கருவிகள் எவை?**

| | | | |
|---|---|---|---|
| 01. | தோற்கருவி | - | பேரிகை, படாகம், இடக்கை, உடுக்கை, சீர்மிகு மத்தளம், சல்லிகை, கரடிகை, தொக்க உபாங்கம், துடி, பெரும்பறை |
| 02. | தொளைக்கருவி | - | புல்லாங்குழல் |
| 03. | நரம்புக்கருவி | - | செங்கோட்டுயாழ், மகரயாழ், சகோடயாழ், பேரியாழ் |
| 04. | கஞ்சக் கருவி | - | தாளம் |

**79. சங்ககாலத்தில் அன்றாடவாழ்வோடு இசையை இணைத்தவர்கள் யார்?**

பாணர்கள்

**80. பாணர்களை நினைவுபடுத்தும் வகையில் ஈழத்தில் இருக்கும் ஊரின் பெயர் என்ன?**

யாழ்ப்பாணம்

**81. ஈழத்தின் வரலாற்றில் தடம் பதித்த இதழ்கள் எவை?**

உதயதாரகை, சுதேச மித்திரன், ஈழகேசரி, மறுமலர்ச்சி, கலைச்செல்வி, சிரித்திரன், மல்லிகை, அலை, வெளிச்சம், கற்பகம், அகமஞ்சரி, ஞானம் ஆற்றல், ஊற்று, தமிழெழில்

**82. நாள் இதழ்கள் (ஈழத்தில்)**

ஈழமுரசு, முரசொலி, ஈழநாதம், சுடர்ஒளி, வலம்புரி, உதயன், தினக்குரல், வீரகேசரி.

**83. இலங்கையில் முதலாவது தமிழிதழும் பழைமையான இதழும் எது?**

உதய தாரகை (1841.01.07)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**84. தமிழ் இலக்கணத்தை எல்லோரும் எளிதினில் கற்கும் வண்ணம் எளிய உரைநடையில் முதன் முதலில் எழுதியவர் யார்?**

பி.யு.போப்

**85. தமிழிசை எப்போது தோன்றியது?**

தமிழ்மொழி தோன்றிய காலத்தில்

**86. கரு நாட்டு இசை (கர்நாட்டிக் இசை) என்பது தமிழ் இசையா?**

ஆம், தமிழ் இசை

தமிழகம் மூன்று பக்கங்களிலும் கடல்களைக் கொண்டுள்ளது. இதனால் தமிழகத்தை கரைநாடு என்றும் தமிழிசையை கரைநாட்டு இசை என்றும் வடக்கே உள்ளவர்கள் குறிப்பிட்டனர். அதையே பலரும் கர்நாட்டிசை என்றனர். ஆங்கிலேயரும் அதை கர்நாட்டிக் இசை என்றனர். ஆகவே கரு நாட்டு இசை என்பது தமிழிசையாகும்.

**87. இசை என்ற பெயரின் விளக்கம் என்ன?**

சுதி, பாட்டு, பண், தாளம், பக்கயியம், பாடுவோர் உள்ளம், கேட்போர் உள்ளம் ஆகிய அனைத்தும் இசைத்தால்தான். அதற்கு இசை என்று பெயர். அல்லாவிட்டால் அதற்குப் பெயர் இரைச்சல்.

**88. தமிழுக்கேயுரிய கலைகள் எவை?**

எழுத்துக்கலை, சொற்கலை, கவிதைக்கலை, மருத்துவக்கலை, இசைக்கலை. நடனக்கலை, நடிப்புக்கலை, காவியக்கலை, கணிதநூற்கலை, உளநூற்கலை, உடற்பயிற்சிக்கலை, கைத்தொழிற்கலை, உழவுத்தொழில்கலை, நுண்கலை, சாகசக்கலை, பாசணக்கலை. ஆட்சிக்கலை

**89. தமிழரின் பண்புகள் எவை?**

அறத்தின் வழி நிற்றல்
ஆண்மையில் உயர்தல்
இன்பத்தில் திளைத்தல்
ஈதலிற் சிறத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் தெள்ளியராதல்
ஊக்கத்தில் தளராதிருத்தல்
எவரையும் தமராய்க்கொள்ளுதல்
ஏற்றத்தாழ்வின்றி வாழல்
ஐயம் திரிபறப் பேசுதல்
ஒழுக்கத்தைக் காத்தல்
ஓரஞ்சாராது நிற்றல்
ஔவியந் தன்னை அகற்றல்

**90. நாட்டை அழிக்கும் அறுவர் யார்?**
நாணயமில்லாத வியாபாரி
நேர்மையில்லாத அரசியல்வாதி
ஒழுக்கமில்லாத சீர்திருத்தவாதி
உண்மையில்லாத எழுத்தாளி
கொள்கையில்லாத பேச்சாளி
அறிவில்லாத படிப்பாளி

**91. தமிழர்களாகிய நாம் எவற்றை மறந்தால் எங்களுக்கு வாழ்வில்லை?**
தமிழ் மகனே,
உனது மொழியை தமிழ் என்று கூறு
உனது கலையை தமிழ்க்கலை என்று கூறு
உனது பண்பை தமிழ்ப்பண்பு எனக்கருது
நீ தமிழன்! என்று நினை. மறவாதே
மறந்தால் உனக்கு வாழ்வில்லை.

**92. தமிழுக்கே கேடு பயக்கும் மணிப்பிரவாள நடையை அறவே விலக்கி தமிழ் மக்கள் பயிலுவதற்குத் தகுந்த உரைநடையை வழக்கில் கொண்டு வந்தவர் யார்?**
வீரமா முனிவர்

**93. சதுரகராதியைப் படைத்தவர் யார்?**
வீரமா முனிவர்

**94. "சதுரகராதி" என்பது என்ன?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரகராதி, பொருள் அகராதி, தொகையகராதி, தொடையகராதி ஆகியவற்றை உள்ளடக்கும்.

**95. தமிழ் எவ்வகையிலும் இழிந்த மொழியன்று, ஆங்கிலத்தின் மூல மொழியானது எழுத்து வடிவம் பெறுவதற்கு முன்னரே தமிழ் எழுத்து வடிவங் கொண்டு சிறந்து விளங்கியது என்று கூறியவர் யார்?**
டாக்டர் வின்சுலோ (அமெரிக்க நாடு)

**96. ஆரியம் இல்லாத சொற்களையும் அவை வழங்கிய மொழிகளையும் "திராவிடம்" என்னும் பெயரிட்டு அழைத்த முதல்மொழி நூலாசிரியர்யார்?**
கால்டுவெல்

**97. அழிந்து போன இசை நூல்கள் எவை?**
சிற்றிசை, பேரிசை, இசைநூல், இசை நுணுக்கம், இசைவிளக்கம், பஞ்சமா, பாரதீயம், மண் அனுமதி, பண்வலி விளக்கம், பாட்டும் பண்ணும், இசைக்கூறு, பாடற்பண்பு

**98. தைரிய நாதர் என்பவரின் இயற்பெயரென்ன?**
கான்சுடான்டைன் யோசெப் பெசுகி (இத்தாலி)

**99. தமிழில் எழுதப்பெற்ற முதல் நாவல் எது?**
பிரதாப முதலியார் சரித்திரம் (1877) இயற்றியவர் - மாயூரம் வேதநாயகம் பிள்ளை

**100. ஈழத்து மண்ணில் வெளியிடப்பெற்ற முதல் நாவல் எது?**
வீரசிங்கன் கதை (சி.வை.சின்னப்பா பிள்ளை 1925)

**101. இசையில் பயன்படுத்தப்படும் பின்வரும் சொற்களுக்கு தமிழ்ச்சொல் என்ன?**

| | |
|---|---|
| எடுப்பு | - தொகுப்பு |
| ராகம் | - பண் |
| சுரம் | - சுருதி |
| ஆலாபரணம் | - ஆலத்தி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**102. கையால் தட்டிக்கிளப்பும் ஒலிக்கும், காலால் தட்டிக்கிளப்பும் ஒலிக்கும் என்ன பெயர்?**

பாணி, தாளம் (தாள்+அம்)

**103. ஷஷதமிழ் எம்மொழிக்கும் தாழ்ந்து வளையாது. தலை நிமிர்ந்து நின்று தன் தனித்தன்மையைக் காத்து தன்னை அணைத்து அழிக்க வந்த வடமொழியையும் வலுவிழக்கச் செய்து வாழ்ந்து வளர்கிறது;; என்ற பேருண்மையை ஒப்பிலக்கண முறைப்படி ஆராய்ந்து உலகம் ஏற்கும் வண்ணம் நிலைநிறுத்தியவர் யார்?**

கால்டுவெல்

**104. வீரமாமுனிவரால் இயற்றப்பெற்ற கிறித்தவக்காப்பியம் எது?**

தேம்பாவணி

**105. சங்க இலக்கிய இலக்கணங்களை வெளியிட்ட தகைசால் பெரியார் இருவர் யார்?**

யாழ்ப்பாணத்து சி.வை.தாமோதரம்பிள்ளை

சோழநாடு உ.வே.சாமிநாதையர்

**106. தமிழ்த்தொண்டு செய்தமைக்காக சென்னை அரசால் "இராவ்பகதூர்" என்ற சிறப்பு விருதினை பெற்ற இலங்கையர் யார்?**

சி.வை.தாமோதரம்பிள்ளை

**107. நகைச்சுவைப் படைப்புத்துறையில் வழிகாட்டிய முதல்நூல் எது?**

பரமார்த்த குருகதை (வீரமாமுனிவர்)

**108. தமிழுக்கு 16வகைச் சிறப்புக்கள் உண்டு. அவை எவை?**

| | |
|---|---|
| பெயர்ச் சிறப்பு | இன்னிசை சிறப்பு |
| எளிமைச் சிறப்பு | தனிமைச் சிறப்பு |
| தொன்மைச் சிறப்பு | சுழிச் சிறப்பு |
| எழுத்துச் சிறப்பு | சொற் சிறப்பு |
| ஒலிச்சிறப்பு | கவிதைச் சிறப்பு |
| கலைச் சிறப்பு | மருத்துவச் சிறப்பு |
| இசைச் சிறப்பு | நாடகச் சிறப்பு |
| இலக்கியச் சிறப்பு | இலக்கணச் சிறப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**109. இலக்கியம் என்றால் என்ன?**

இலக்கு என்பது குறி இலக்கியம் என்றால் குறிக்கோளுடையது

**110. தமிழுக்கே மிகவும் சிறப்பாகவுள்ள எழுத்து எது?**

ழ

**111. தமிழரின் சொல் வளத்திற்கு எவற்றைக் குறிப்பிடலாம்?**

தழை - 01. மலையில் விளைகின்ற உசிலை முதலியவற்றின் இலைகள்

மடல் - 02. சப்பாத்தி, கள்ளி தாழை முதலியவற்றின் இலைகள்

தோகை - 03. கரும்பு, நாணல் முதலியவற்றின் இலைகள்

ஓலை - 04. தென்னை, பனை, ஈந்து, கமுகு

**112. பண்டைத் தமிழகத்தின் போர்ப் பண்புகள் எவை?**

01. தனிமனிதத் தன்மையிலும் அன்றாட வாழ்விலும் போர்க்களங்களிலும் தனிப்பட்ட ஒழுக்க நெறிகளை கடைப்பிடித்திருந்தனர்.

02. போரில் அஞ்சாநெஞ்சம், வீரம், உயிர்துறத்தல் இவை போற்றப்பட்டன.

03. போர் செய்வதை இன்றியமையாக் கடமை ஆக்கினர்.

தந்தையையும், கணவனையும் போரில் காணிக்கையாக்கிய பெண் போர்முரசு ஒலிக்கக் கேட்டதும் தன் ஒரே மகனைப் போருக்கு அனுப்பி மகிழ்ந்த வீரத்தாய் பற்றி நிகழ்ச்சி இன்றளவும் சமுதாய நிலையில் வைக்கப்பட்டு பாராட்டப்படுகிறது.

04. முதுகில் காயப்படுவதைப் போரிழுக்காகக் கருதி உயிர் துறப்பர்.

05. ஆயுதம் இல்லாத நிலையில் எதிரி நிலைகுலையும் போது அதை ஒரு வாய்ப்பாகக்கருதி தாக்குவதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழைத்தனமாகக் கொண்டனர்.

06. போரில் மடிந்த வீரர்களைப் பெருமைப்படுத்தி நினைவூட்டப்பெருஞ்சோற்று விழா எடுத்தனர்.

07. போர் எழும் சூழ்நிலை உருவானதும் முடிமன்னர்களுக்குட்பட்ட சிற்றரசர்கள் முடிமன்னர்களுக்காக அணிதிரண்டு போராடும் வழக்கம் ஒரு நிலையான கூட்டுச் சேரும் பண்பாக விளங்கியது.

**113. சங்ககால படைப்பிரிவுகள் எவை?**

யானைப்படை
தேர்ப்படை
குதிரைப்படை
காலாட்படை
கப்பற்படை

**114. பிறமொழிச் சொற்கள் உருவத்தை மட்டுமே காட்டுவன. தமிழில் உள்ள சொற்கள் உருவத்தோடு அதன் பருவத்தையும் காட்டுகின்றன அவையாவை?**

பெண்களுக்குரிய பருவங்கள்

| | |
|---|---|
| பேதை | - 08 அகவைக்குக் கீழ் |
| பெதும்பை | - 12 அகவைக்குக் கீழ் |
| மங்கை | - 16 அகவைக்குக் கீழ் |
| மடந்தை | - 25 அகவைக்குக் கீழ் |
| அரிவை | - 30 அகவைக்குக் கீழ் |
| தெரிவை | - 35 அகவைக்குக் கீழ் |
| பேரிளம்பெண் | - 45 அகவைக்குக் கீழ் |

**115. ஆண்களுக்குரிய பருவங்கள் எவை?**

| | |
|---|---|
| பாலன் | - 07 அகவைக்குக் கீழ் |
| மீளி | - 10 அகவைக்குக் கீழ் |
| மறவோன் | - 14 அகவைக்குக் கீழ் |
| திறலோன் | - 15 அகவைக்குக் கீழ் |
| காளை | - 16 அகவைக்குக் கீழ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடலை - 30 அகவைக்குக் கீழ்
முதுமகன் - 35 அகவைக்குக் கீழ்

**116. பருவத்தை பின்வருமாறும் அழைக்கலாம்**

பிள்ளை - குழந்தைப் பருவம்
சிறுவன் - பாலப் பருவம்
பையன் - பள்ளிப் பருவம்
காளை - காதற் பருவம்
தலைவன் - குடும்பப்பருவம்
முதியோன் - தளர்ச்சி பருவம்
கிழவன் - மூப்புப் பருவம்

**117. பூவிற்குரிய பருவங்கள்**

அரும்பு - பூ அரும்பும் நிலை
மொட்டு - பூ மொட்டு விடும் நிலை
முகை - பூ முகிழ்க்கும் நிலை
மலர் - பூ மலரும் நிலை
அலர் - பூ மலர்ந்த நிலை
வீ - பூ வாடும் நிலை
செம்மல் - பூ வதங்கும் நிலை

**118. இலைக்குரிய பருவங்கள், உருவங்கள் எவை?**

கொழுந்து இலை- குழந்தைப்பருவம்
தளிர் இலை - இளமைப்பருவம்
இலை - காதல் பருவம்
பழுப்பு இலை - முதுமைப்பருவம்
சருகு இலை - இறுதிப்பருவம்

**119. தமிழில் உள்ள ஓரெழுத்து ஒரு சொற்கள் எவை?**

ஆ - பசு
நா - நாக்கு
பை - சாக்கு
வா - வரவேற்றல்
போ - விரட்டுதல்
கா - சோலை
தீ - நெருப்பு
மை - கருமை
வை - ஏசுதல்
ஈ - இலையான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கை | - ஓர் உறுப்பு | பூ | - மலர் |
| தா | - கொடு | மா | - குதிரை |
| கோ | - மன்னன் | தை | - ஒரு மாதம் |

**120. தமிழர்களின் சமயம் என்ன?**

தமிழர்களின் இயற்கையான சமயம் சைவ சமயம். உலகம் முழுவதும் ஒரு காலத்தில் சைவசமயமே பரவியிருந்தது. பின்னர் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு மதகுருமார் தோன்றி ஒவ்வொரு மதத்தை நிலைநாட்டிச் சைவர்களில் இருந்தே அதற்கு மக்களைச் சேர்த்து அதனைப் பெருகச் செய்தனர்.

**121. மொழியால் மக்களுக்குப் பெயராயிற்றா? மக்களால் மொழிக்கு பெயராயிற்றா?**

மொழியால்தான் மக்களுக்கு பெயர் அமைந்தது. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம். அது போல மொழி இருந்தால் அன்றோ மக்களுக்கு பேச்சு வரும். பேச்சு வந்தபின் தானே அப்பேச்சுக்கு பெயர் அமைந்து மக்களுக்கும் ஆக வேண்டும்.

**122. ஔவையாரின் தனிப்பாடல்களில் மிக்க புகழ் பெற்றவை அவர் பாடிய நான்கு கோடிப்பாடல்கள். அதைக்குறிப்பிடுக?**

மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்
உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்
மனையில் உண்ணாமை கோடி பெறும்
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைய
நாக் கோடாமை கோடி பெறும்
கோடி கொடுத்தும் குடிப்பிறப்பார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்.

**123. "உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" என்று கல்வியின் இன்றியமையாமையை பற்றிக் கூறிய மன்னன் யார்?**

பாண்டியன் அறிவுடை நம்பி

**124. பழந்தமிழ் நாட்டின் தன்மையை எடுத்துக்காட்டும் தொகைநூல் எது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறநானூறு

**125. திருக்குறள் சைவநூலா? வைணவ நூலா? பௌத்த நூலா?**

திருக்குறள் பொதுச்சமயநூல். அது பொதுமறை. அதில் கூறப்படும் விடயங்கள் எச்சமயத்தவரும் ஏற்றுக்கொள்ளத்தக்கனவே. உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உலக அறிஞர்கள் போற்றும் பொதுமறையாகி விட்டது.

**126. கரணம் (சடங்கு) செய்யும் வடமொழியாளரின் நோக்கம் என்ன? இந்த நோக்கத்தை இல்லாமல் செய்வது எவ்வாறு?**

அ. கரணம் செய்பவர்கள் தங்களை உயர்ந்தவர்களாகத்தக்க வைத்துக் கொள்ளவும். காலமெல்லாம் தன்னலத்துடன் வாழத்திட்டமிட்டும் மானமும் மதிப்பும் பகுத்தறிவு விளக்கமும் இல்லாப்பிறவியாகவே தமிழ் மக்கள் என்றும் இருக்க வேண்டும் என்று திட்டமிட்டும், தமிழ்மொழி நீசா மொழி என்றும் வடமொழி தேவமொழி என்றும் கூறி வடமொழி வழியே சடங்குகள் செய்து வருகின்றனர்.

அப்படிச் செய்யாவிட்டால் மழை பொழியாது. நாடு விளையாது, நோய் நொடி பரவும், கரு வாய்க்காது, வாழ்வு நீடிக்காது என்று அச்சுறுத்தி அச்சத்தாலேயே தமிழ்ப்பிறவியர் அடங்கிப்போகவும் விடாப்பிடியாக வடமொழிசடங்கு வழியைப் பற்றிக் கொண்டிருக்கச் செய்கின்றனர்.

ஆ. நாம் பகுத்தறிவோடு சிந்திக்க வேண்டும். வடமொழிச்சடங்கு நடத்தி வாழ்வு கொண்டவர் கைம்மையர் ஆகவில்லையா? நோய் நொடி வரவில்லையா? ஒருவரை ஒருவர் பிரிந்து போகவில்லையா? இச்சடங்கு செய்வார் குடும்பத்திலும் இவை ஏற்படவில்லையா? இவ்வகைச்சடங்கு நடத்தப்பட்டவர்க்கு மட்டும் கொட்டோ கொட்டென மழை பொழிந்து விளைவு பெருகி வாணிக வளம் சிறந்து நோய் நொடியே இல்லாமல் வாழ்கின்றனரா? சடங்கிலேயா வாழ்வு இருக்கிறது? வாழ்வு அவரவர் கையில் அல்லவா இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழி ஓதாமல் கரணம் செய்பவர்களுக்கு கரு உண்டாகவில்லையா? வாழ்வு சிறக்கவில்லையா? மந்திரம் ஓதியமையாலா கோழி முட்டையிட்டு குஞ்சு பொரித்தன? மந்திரம் ஓதியமையினாலா ஆடும் மாடும் கருக்கொண்டு குட்டியும் கன்றும் போட்டன எண்ணிப்பார்க்க வேண்டாமா? சொல்பவனுக்கும், கேட்பவனுக்கும் ஊடகமாகவும் உணர்வாகவும் இருப்பது எது? அது மொழி. சடங்கு புர-ியும் மொழியில், புரியும் வகையில் பொருந்தும் முறையில் செய்யப்பட வேண்டும் என்பதே அடிப்படை.

**127. உணர்வே உருவாய கடையெழு வள்ளல்கள் யார்?**

பாரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, ஓரி, பேகன்

**128. அவர்கள் எந்த வகையில் புகழ் பெற்றவர்கள்?**

01. முல்லைக்கொடி கொழுகொம்பு பெறாத நிலையை கண்ணால் கண்டபின் தன்செல்வநிலையும் வாழ்வும் மறந்து, அதற்கு உதவுதலே உணர்வாய்தான் ஊர்ந்துவந்த தேரை அதற்கு உரியதாக நிறுத்தினான் பாரி.

02. இரவலர்க்கு குதிரைகளை வழங்கி நாட்டையும் நல்கியவன் காரி

03. நீலநிறப்பட்டாடையை ஆலமர்ச்செல்வனுக்குக் கொடுத்து வேண்டிய பொருள்களையும் ஊர்களையும் வந்தவர்க்கெல்லாம் வழங்கினான் ஆய்

04. பெறுதற்கு அரிதான வாழ்நாள் வளர்ச்சிக்குரியதாய் கிடைத்த அருமையான நெல்லிக்கனியை தான் உண்ணாமல் புலவர் நீடு வாழ விரும்பி ஔவையாருக்கும் அளித்து மகிழ்ந்தான் அதியமான்.

05. நண்பர்கள் இல்லறம் நடத்த வேண்டுமென நல்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்பெற்றவன் நள்ளி

06. கூத்தர் தம் கலைவாழ அவர்களுக்கு நாடு கொடுத்தான் ஓரி

07. மயில் ஆடி அகவியதைக் கேட்டுக் குளிரால் நடுங்கி கூவியதாக உணர்ந்து தன் போர்வையை அளித்தான் பேகன்

**129. இந்தியமொழி இலக்கியங்களில் முதலில் தோன்றிய இலக்கியம் எது?**

தமிழ்மொழி இலக்கியங்கள்

**130. இரசியாவில் ஒரு பல்கலைக்கழக நுழைவாயில் அமைக்கும்போது அதில் இட்ட பாடலடி என்ன?**

கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்"

**131. உலகில் எத்தனை மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன?**

9000

**132. கடைச்சங்க காலத்திலிருந்து 16ம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டில் வாழ்ந்த ஔவையார் எத்தனை?**

எழுவர்

01. கடைச்சங்க ஔவையார் (கி.பி.02ம் நூற்றாண்டு) அதியமானால் தொண்டைமானிடம் தூது போக்கப்பட்டவர்.

02. அங்கவை சங்கவை கால ஔவையார்

03. சேரமான் பெருமாள் நாயனார் கால ஔவையார்

04. கம்பர் கால ஔவையார் (12ம் நூற்றாண்டு)

05. அறிவை குறள் ஔவையார் (14ம் நூற்றாண்டு)

06. ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை முதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னெறிச்சுவடிகள் பாடிய ஔவையார் (16ம் நூற்றாண்டு)

07. பத்தனந்தாதி ஔவையார் (17ம் நூற்றாண்டு)

**133. உலக நீதியைப்பாடியவர் யார்?**
உலகநாத பண்டிதர் (16ம் நூற்றாண்டு)

**134. நன்னெறியைப் பாடியவர் யார்?**
சிவப்பிரகாச அடிகள் (40நேரிசை வெண்பாக்கள் 17ம் நூற்றாண்டு)

**135. நளவெண்பாவைப் பாடியவர் யார்?**
புகழேந்திப்புலவர் (13ம் நூற்றாண்டு)

**136. நன்னூலை இயற்றியவர் யார்?**
பவணந்தி முனிவர் (சமண முனிவர்)

**137. தமிழை ஆட்சி மொழியாகவும் சைவத்தை வழிபாட்டு மதமாகவும் கொண்ட இலங்கை மன்னர்கள் யார்?**

| | |
|---|---|
| விசயபாகு | - கி.பி.1070 -1111 |
| விக்கிரமபாகு | - கி.பி.1116 - 1139 |
| மானபரண | - பி.பி.1230 -1244 |
| முதலாம் கயபாகு | - கி.மு.171.193 |
| ஐந்தாம் புவனேகபாகு | - கி.பி.1344 - 2354 |
| ஏழாம் புவனேகபாகு | - கி.பி.-1521-1550 |
| கீர்த்திசிறி இராசசிங்கன் | - கி.பி.1777 |
| சிறிவிக்கிரம இராயசிங்கன் | - கி.பி.1813 |

**138. இருவகைப்பாணர்கள் யாவர்?**

| | |
|---|---|
| சிறுபாணர் | - புல்லாங்குழலும் மதங்கமும் (மிருதங்கம் இயக்குபவர்கள்) |
| பெரும்பாணர் | - இசைக் குழலும் (நாதச்வரம்) மத்தளமும் இயக்குபவர்கள் |

**139. கி.பி.1777ம் ஆண்டில் கண்டியை ஆண்ட கீர்த்தி சிறி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராசசிங்கனுக்கும் பிரெஞ்சு மன்னன் 16ம் லூயிக்கும் இடையில் செய்யப்பட்ட ஒப்பந்தம் எந்த மொழியில் எழுதப்பட்டது?**
தமிழில்

**140. 1850இல் யாழ்ப்பாணத்தில் தமிழிலேயே மருத்துவக்கல்வியைப் போதித்த அறிஞர் யார்? அவர் தமிழில் எழுதிய மருத்துவ நூல்கள் எவை?**
சாமுவேல் பிசுக் கிறீன் பாதிரியார்
தமிழில் எழுதிய நூல்கள் வைத்தியாகரம், இரண வைத்தியம்.

**141. அமெரிக்காவில் தொலைக்காட்சிப்பெட்டியை எவ்வாறு அழைப்பர்?**
முட்டாள் பெட்டி (Idiot box)
அவ்வாறு அழைப்பது ஏன்?
சிந்தனையை மழுங்கடிப்பதால். ஆனால் இந்த தொலைக்காட்சிப்பெட்டி தமிழ்ப்பெண்கள், சிறுவர், ஆண்கள் ஆகியோரில் பெரும்பாலானவரை முட்டாள்களாக, சோம்பேறிகளாக, செயலாற்றல் அற்றவர்களாக, சிந்தனை ஆற்றல் குறைந்தவர்களாக மாற்றி வருகின்றது. மாணவர்கள் வெளியே திரியும் நேரம் தவிர மற்ற நேரங்களில் தொலைக்காட்சி முன்பு அமர்வது நேரத்தைக் கொலை செய்து இன்பம் பெறுகின்றனர்.

**142. கல்வியின் குறிக்கோள் என்ன?**
அறிவை அடைவது மட்டுமன்றி அன்பை, அருளை, பண்பை, ஒழுக்கத்தைப் பெற்று நல்வாழ்வு வாழ வழிப்படுத்துவது.

**143. கல்விச் செல்வத்தின் சிறப்பு என்ன?**
"கேடில் விழுச் செல்வம் கல்வி" என்பது வள்ளுவர் வாக்கு. ஈடு இல்லாச் செல்வம் என்பது வி.கலியாணசுந்தரத்தின் கருத்து. பிற செல்வங்கள் நீராலும் நெருப்பாலும் அழியும். ஆனால் கல்விச்செல்வமோ வெள்ளத்தால் அழியாது. வெந்தழலால் வேகாது. கொள்ளையிட முடியாது. கொடுத்தாலும் குறையாது. இவ்வுலகில் உள்ள செல்வங்களில் பங்காளிகளால் பங்கிட்டுக் கொள்ள முடியாத ஒரே செல்வம் கல்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**144. ஒரு மனிதனை யார் என்று அறிய இரண்டு விதமான வழிகள் உண்டு. அவை எவை?**

01. அவனுடைய நண்பர்கள் யார் என்று அறிவது

02. அவனுடைய கேள்விகள் என்னென்ன என்று அறிவது

முன்புள்ளது அவனது நடத்தையைக்காட்டும்

பின்புள்ளது அவனது அறிவைத் தெளிவாகக் காட்டும்.

**145. பதினாறு வகைச் செல்வங்களும் எவை?**

மனை, மனைவி, மக்கள், தாய், நீர், நிலம், கால்நடைகள், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், வலிமை, ஏவல், பொன், மணி, புகழ்.

**146. சிக்கனம், கருமித்தன்மை என்ற இரண்டினதும் பொருள் என்ன?**

தேவைக்கு மேல் செலவு செய்வது "வீண் செலவு"

தேவையின் அளவு செலவு செய்வது "சிக்கனம்"

தேவைக்கும் செலவு செய்யாதது "கருமித்தனம்"

**147. சுறுசுறுப்பு, படபடப்பு என்பதன் பொருள் என்ன?**

அருஞ்செயல்களைப் பொழுதை வீணாக்காமல் அமைதியாகச் செய்து முடிப்பவன் சுறுசுறுப்பானவன்.

அதிகமாகத் துடித்து எதையும் செய்ய இயலாமல் துன்பப் படுகிறவன் படபடப்புக்காரன்.

**148. தமிழில் பிறமொழிக்கலப்பு பத்துமுறையில் நடந்திருக்கின்றது என்று அறிஞர் கூறியுள்ளார். அவை எவை?**

01. மொழித்திணிப்பு

02. சமயத்தன்மை

03. அயல் மொழியின் ஆட்சி

04. பிறநாடுகளில் குடியேற்றம்

05. வணிகத்தொடர்பு

06. அறிவியல் படைப்புக்களை ஏற்றல்

07. பிறமொழி மேல் பெருவிருப்பம்

08. சோம்பல் தனம்

09. தாழ்வு மனப்பான்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மொழிப்பற்றின்மை

**149. உலகத்திற்கு தமிழரின் நன்கொடைகள் எவை?**

01. தொன்மை நாகரிகக் கொடை
02. எழுத்துக்கொடை
03. இசைக்கொடை
04. பயன் பாட்டுப் பொருள்களின் கொடை
05. அரிசி தூவும் சடங்குக் கொடை
06. எண்கள் கொடை
07. தமிழ்ச் சொற்கள் கொடை
08. சமயக்கொடை
09. கட்டடக்கலைக் கொடை
10. கோட்பாட்டுக்கொடை
11. இலக்கியநூற்கொடை

**150. தமிழரைப்பற்றி வங்கக்கவி தாகூர் கூறியது என்ன?**

தாய்மொழியையும் அதன் சிறப்புமிகு இலக்கியங்களையும் மதிக்காது வேறு (ஆங்கில) மொழிக்குத் தம்மை அடிமையாக்கிக் கொண்டவர்கள் தமிழர்களைப்போல் வேறு எந்த நாட்டிலும் இல்லை.

151. இலக்கியங்களைக் கற்பவர் எவ்வாறான மனநிலையுடையவராக இருத்தல் வேண்டும் என முனைவர் மு.வரதராசன் கூறுகிறார். கதைகளையும் காவியங்களையும் கற்பவன் அவற்றில் வாழும் மாந்தர்களின் உலகத்திற்கே சென்றாக வேண்டும். தன்னை இழந்து கற்க வேண்டும். கதைகளிலும், காவியங்களிலும் உள்ள இன்ப துன்ப உணர்ச்சிகளை எல்லாம் தான் ஊற்றிடல் வேண்டும். அயலார் வீட்டுக்குழந்தைகளில் இன்ப துன்பங்களைக்கொண்டு ஒரு சிறிது சிரித்தும் ஒரு சிறிது இரங்கியும் கடந்து செல்லுதல் போல் அல்லாமல் தன் வீட்டுக்குழந்தைகளின் இன்ப துன்பங்களில் இரண்டறக்கலத்தல் போன்ற மனநிலை வேண்டும்.

தியாக மனப்பான்மை கதையும் காவியமும் கற்பவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கும் அந்நேரத்திற்கேனும் வேண்டும். இல்லையேல் அவற்றைக் கற்கும் தகுதி இல்லாதவர் ஆவர்.

சிலம்பு நாடகத்தை மேடையில் நடிக்கக் காண்பவர் கண்ணகியின் வாடிய மேனியைக் கண்டு வாடுதல் வேண்டும். அதே நிலையில் கண்ணகியின் நெஞ்சத்துப் பொறுமையும் உறுதியும் நாடகத்தைக்காண்பவரின் நெஞ்சத்திலும் ஓரளவு பதிதல் வேண்டும். மாதவியின் மகிழ்ச்சியில் உள்ளம் கலந்து மகிழ்தல் வேண்டும். கானல் வரிப்பாட்டில் மனம் இயைதல் வேண்டும்.

கலைப்பண்பாடு இல்லாதவர் உயர்ந்த கதையும் சிறந்த காவியமும் கற்பினும் போதிய பயன் அடைய முடியாது. ஆகவே நெஞ்சப் பண்பாடு தேவையாகிறது.

**152. சங்க இலக்கியங்களில் கையாண்ட தூயதமிழ்ச் சொற்களும் கருத்துக்களும் சில**

| | |
|---|---|
| முதல் | - புதர் |
| கேழ் | - நிறம் |
| உழுவை | - புலி |
| கதுப்பு | - கூந்தல் |
| இறும்பு | - காடு |
| அம்பு | - ஓடம் |
| பாயல் | - படுக்கை |
| சுவல் | - மேடு |
| கூவல் | - கிணறு |
| வெதிர் | - மூங்கில் |
| கோட்டு உகிர் | - வளைந்த நகம் |
| பிணவு | - பெண்புலி |
| சிதலை | - கறையான் |
| உளியம் | - கரடி |
| வல்சி | - உணவு |
| பிணவலி | - வெண்பன்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தறுகண் | - அஞ்சாமை |
| கவுள் | - கன்னம் |
| வெருகு | - பூனை |
| மறுகு | - தெரு |
| பதுக்கை | - கல்குவியல் |
| எருவை | - பருந்து |
| கவின் | - அழகு |
| அறல் | - நீர் |
| புடை | - பக்கம் |
| பீள் | - குருத்து |
| மோடு | - வயிறு |
| வலந்த | - பின்னிய |
| பழனம் | - மருதநில வயல் |
| காயல் | - உப்பு |
| பெண்ணை | - பனை |
| உமணர் | - உப்பு வாணிகர் |
| ஒழுகை | - வண்டி |
| மாதிரம் | - திசை |

**153. திரைகடலில் ஓடும் பழக்கம் பழங்காலத் தமிழர்க்கு உண்டு? சங்ககாலத்தில் எழுந்த இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?**

சேரன் செங்குட்டுவன் கடற்படை உடையவனாய்அராபியரை துரத்தி வென்று "கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்" எனப் புகழப்பட்டான். தமிழ் நாட்டு வாணிகர் சாவகம் முதலிய கிழக்கிந்தியத் தீவுகளுக்கு கப்பலில் சென்று வணிகம் செய்தனர். கடற்கரையில் பல துறைமுகப் பட்டினங்கள் செழித்து விளங்கியிருந்த காலம். மருதனிளநாகனார் எழுதிய பாட்டில் கப்பல்கள் மிகப்பெரியனவாய் இருந்தன என்றும், அவை அசைந்து புறப்பட்டபோது உலகமே அசைந்தெழுவது போல இருந்தன என்றும், பல நாள் இரவும் பகலும் செல்லக்கூடிய நீண்ட பயணங்கள் இருந்தன என்றும் கப்பல்களுக்கு துறைமுகத்தை அறிவிக்க கலங்கரை விளக்கங்கள் இருந்தன.

**154. யாழ்ப்பாண (நாட்டின்) பிரதேசத்தின் வரலாறு பற்றிய கதைகளைக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூறும் நோக்குடன் எழுந்த நூல்கள் எவை?**
வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை

**155. கைலாய மாலையை எழுதியவர் யார்?**
உறையூர் செந்தியப்பரின் மகன் முத்துராசா கவிராயர்

**156. யாழ்ப்பாண வைபவமாலையை எழுதியவர் யார்?**
மயில்வாகனப் புலவர்

**157. யாழ்ப்பாணத்தை சிங்கையா ஆட்சி செய்வதற்கு முன்பு எந்த அதிகாரி நிர்வகித்தார்?**
பாண்டி மழவன்

**158. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு எங்கே எப்போது நடைபெற்றது?**
2010 தமிழ்நாடு கோவை நகரில் 25.06.2010

**159. சொல்லாய்வுக்கு தேவைப்படும் ஆறு பண்புகள் எவை?**
01. மதிக்கூர்மை
02. பரந்த கல்வி
03. நடு நிலைமை
04. அஞ்சாமை
05. தன்னலமின்மை
06. மெய்யறிவு

**160. கடவுள் என்ற சொல்லுக்கு பொருள் என்ன?**
கடந்தவன், நம்முடைய அறிவு, ஆராய்ச்சி, விருப்பு வெறுப்பு ஆகிய எல்லாவற்றையும் கடந்தவன் அவன். ஆண், பெண் என்ற பால் வேறுபாடு, சாதி, சமயம் குடும்பநிலை ஆகிய எல்லாவற்றையும் கடந்தவன்.

161. அறியாமை, சோம்பல், பிறமொழி மோகம் காரணமாக தமிழில் உள்ள சொற்கள் இன்று வழக்கு ஒழிந்து விட்டன. அவற்றுள் சில ஓமாலிகை (வாசனைச்சரக்கு) கழுவாய் (பிராயச்சித்தம்) கூலம் (தானியம்) கோள்மீன் (கிரகம்) சால்பு (திருப்தி) சாறு (இரசம்) நீர்ச்சீலை (கோவணம்) நெஞ்சாங்குலை(இதயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படமாடம் (சிறுகூடாரம்) பலகணி (யன்னல்) மருப்பு (தந்தம்) மீகாமன் (மாலுமி) மன்பதை (மனிதஇனம்)

**162. பாவேந்தர் பாரதிதாசனாரின் தமிழுணர்வு பற்றிய பாக்களின் வரிகள் சிலவற்றை குறிப்பிடுக?**

"தமிழுக்கு அமுதென்று பேர். அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"
"உமை ஒன்று வேண்டுகிறேன். மாசில்லாத
உயர் தமிழை உயிர் என்று போற்றுங்கள்"

"தமிழ் படித்தேன் அதை உண்ணத்தான் தமிழ் படித்தேன்"

"இன்பத் தமிழ்மொழி உலக முதன் மொழி"
"ஆதி மனிதன் தமிழன்தான் அவன் மொழிந்தது
செந்தமிழ்த் தேன்"
"மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள்
மாத்தமிழுக்கு ஈடில்லை என்றுரைப்போம்"

தொண்டு செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே
பகர்கின்ற செந்தமிழின்
பழி நீக்கப் பெண்களெல்லாம்
பறந்து வாரீர்

தமிழகத்தின் தமிழ்த்தெருவில்
தமிழ்தான் இல்லை

உயிர் போன்ற உங்கள் தமிழ்
உணர்த் தால் கடவுள் அதை
ஒப்பார் போலும்

கல்லூரிக் கணக்காயர் எவரும் நாட்டில்
முழு நலத்தில் பொறுப்புடனும்
முன்னேற்றக் கருத்துடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பாராயின்
அழகிருக்கும் தமிழன்னை
சிரித்தெழுவாள்அவள் மக்கள்
அடிமை தீர்வர்.

தமிழ் நாட்டுப் பாடகரே தமிழ்பாடி
தமிழ் மானம் காப்பீர் நன்றே
தமிழ் உயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்
அறிவுயரும் அறமும் ஓங்கும்

தமிழ் அழிந்திட்டால் தமிழர் அழிவார்

"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணொடும்
உடுக்களோடும் மங்கு கடல் தன்னொடும் பிறந்த தமிழ்"

**163. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மொழியை உயிர் என்று உயர்த்திக் கூறியது ஏன்**

மனிதன் பெற்றுள்ள எல்லாவற்றையும் விட உயிரே உயர்வானது அந்த உயிர் போன்ற மொழியும் அவனிடமுள்ள அனைத்தையும் விட மேன்மையானது. உயிர் போனால் திரும்பி வராது. மொழி அழிந்தால் அது மறுபடியும் உருவாகாது. உயிர் நீங்கினால் உடல் அழியும். மொழி மறைந்தால் அவ்வினத்தின் பண்பாடு அழியும்.

**164. தமிழே தொன்மை மிகுந்த மொழி. உலகின் முதன்மொழி. இந்தோ ஆரிய மொழிகள் உட்பட அனைத்து மொழிகளுக்கும் மூலமான மொழி என்ற உண்மையை ஆய்ந்து அறிவித்தவர்கள் யாவர்?**

மாசுவல் கார்த்திகேய முதலியார் (1913)
கா.சுப்பிரமணியப்பிள்ளை (1920)
நல்லூர் ஞானப்பிரகாச அடிகள் (1930)
கருணாமிர்த சாகரம் ஆபிரகாம் பண்டிதர் (1940)
தேவநேயப் பாவாணர் (1940)
ஞானகிரி நாடார் (1980)
கோ.இராமச்சந்திரன் (1985)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**165. உலகமெல்லாம் பயன்படுத்திவரும் 01,02,03,04,05,06,07,08,09,10 ஆங்கில எண்களா? அரபு எண்களா? தமிழ் எண்களா?**

தமிழ் எண்கள்

ஆயிரம் ஆண்டுகளுக்கு தமிழ் வரிவடிவம் எப்படி இருந்தது என்பதை அரசினர் ஆராச்சித் துறையின் சுவடியில் கண்டால் இன்றைய இந்த எண்கள் தமிழ் எழுத்துக்களே என்பதை தெரிந்து கொள்ளலாம். இந்தத் தமிழ் எண்களை வணிகத் தொடர்புடைய அராபியர் கொண்டு போயினர். அவர்களிடமிருந்து மேல் நாட்டினர் கற்றுக் கொண்டனர். ஒரு மாற்றமும் செய்யாமல் அப்படியே எடுத்தாண்டனர். தற்போது மாற்றத்திற்கு உண்டாயிற்று.

**166. பழங்குடி மூதாட்டியின் மரணத்துடன் அமெரிக்காவின் ஒரு மொழி அழிந்துள்ளது. அந்த மொழியின் பெயர் என்ன?**

அமெரிக்காவின் அலச்காவின் பழங்குடி மக்களின் மொழியான "ஏலக்" என்ற மொழி.

**167. ஐக்கிய நாடுகள் அவையின் அறிக்கை ஒன்றில் 30 ஆண்டுகளில் அழியப்போகின்ற மொழிகளில் ஒன்றான தமிழும் இருப்பதாகச் செய்தி சில ஆண்டுகளுக்கு முன்பு ஊடகங்களில் வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தியது. தமிழ் அழியுமா?**

முப்பது ஆண்டுகளில் தமிழ் அழிந்து விடாது. முப்பது ஆண்டுகள் என்பது மிகைப்படுத்திய ஒன்று. நீண்ட காலத்திற்கு இவ்வாறு இறுமாப்போடு இருக்க முடியாது.

தமிழ்மொழி நீடித்து நிலைத்து இருக்க வேண்டும் என்ற சிந்தனை ஒவ்வொரு தமிழனின் நெஞ்சிலும் இருந்தால் மட்டும் தான் தமிழ்மொழி நீண்ட காலத்திற்கு நிலைக்கும். தாழ்வு மனப்பான்மையை விடுத்து எங்கும் எதிலும் தமிழை வளர்க்க முன்வர வேண்டும். இல்லையென்றால் அழிந்து போன மொழிகளின் பட்டியலில் தமிழ் இடம் பெறுவது தவிர்க்க முடியாததாகும்.

(சுடர்ஒளி சித்திரை 24.2010)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**168. 21ம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் இந்தியும் வங்காளி மொழி மட்டுமே வாழும் என்ற ஐக்கிய நாட்டு கல்வி, அறிவியல் பண்பாட்டு மன்றம் முன்னறிவிப்புச் செய்துள்ளது. மறைந்த மொழிகளின் பட்டியலில் தமிழ் சேர்ந்து விடாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?**

தாய்மொழி ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் இல்லையென்றால், புதுப்புதுப் பொருளுக்குக் கலைச்சொல்லாக்கம் தொடர்ந்து நடைபெறவில்லை என்றால், வீட்டிலும் வீட்டுக்கு வெளியேயும் அம்மொழி பயன்பாட்டு மொழியாக இல்லையென்றால் தமிழர் தம் வாழ்வியல் நிகழ்வுகளிலும் தமிழைப் பயன்படுத்தவில்லையென்றால் அம்மொழி மெல்ல மெல்ல அழிவு நிலை அடைந்து விடும்.

**169. செம்மொழித் தகுதிக்கு மொழியியலாளர் வகுத்துத்தந்துள்ள 11தகுதிப்பாடுகள் எவை?**

01. தொன்மை
02. தனித்தன்மை
03. பொதுமைப்பண்பு
04. நடுவு நிலமை
05. தாய்மைத்தன்மை
06. பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு
07. பிறமொழித்தாக்கமிலாத் தன்மை
08. இலக்கிய வளம் (LITERARY POWER)
09. உயர் சிந்தனை
10. கலை இலக்கிய தனித்தன்மை வெளிப்பாடு
11. மொழிக்கோட்பாடு (LIGUISTIC PRINCIPLES)

**170. உலகத்தமிழ் பண்பாட்டியக்கம் எப்போது உருவாயிற்று?**

1974.01.08 இல் யாழ்ப்பாணத்தில் பேராசிரியர் சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையன், குரும்பசிட்டி கனகரத்தினம் அவர்களாலும் உருவாக்கப்பட்டது.

**171. செவ்வாய்க்(கோள்) மண்டலம் சிவப்பு மண்ணால் அமைந்தது. என்ற**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உண்மையை அறிவியல் கண்டு அவனிக்கு இன்று உணர்த்தியுள்ளது. ஆனால் விண்கலம் இல்லாத காலத்தில் தொலைநோக்கி இல்லாத காலத்தில் அந்தக்கோள் செந்நிற மண்ணால் ஆனது என்பதை உணர்ந்து அதற்கு செவ்வாய் என்ற பெயரும் வைத்தது யார்?**
2000ஆண்டுகளுக்கு முன்பு ஆதித் தமிழன்

**172. உருவ வழிபாட்டை இந்த மண்ணில் உருவாக்கியவர்கள் யார்?**
ஒரு மாமனிதன் மறைந்த இடத்தில் நடுகல் நட்டு வழிபட்டார்கள். இந்நடுகற்களே வளர்ச்சி பெற்று சிவலிங்க வடிவம் பெற்றது.

**173. கடவுளாக மாற்றப்பட்ட முதல் தமிழன் யார்?**
முருகன் (ஆதிப்பழந் தமிழன்)

**174. தமிழ் செம்மொழியா? செவ்வியல் மொழியா?**
செம்மொழி என்று அழைப்பதே சரி. செம்மொழி எனில் செம்மையாய் அமைந்த மொழி என்பது அதன் பொருள். செம்மொழி மாதவர் (சிலம்பு 30.32) "செம்மொழி" அகநானூறு 349. "செந்தமிழ் நிலத்து வழக்கொடு)" (தொல் எச்சம் 2எனப்பாடல்களில் இடம் பெற்றுள்ளது. இதே பொருளில் பரிதி மாற் கலைஞரும் மொழி ஞாயிறு தேவ நேயப் பாவாணரும் தமிழை (Classical Language) என்று குறிப்பிடுவர். Classical Literature என்பதை தமிழில் செவ்விலக்கியம் எனக்குறிப்பிடலாம்.

**175. தமிழ் உயர்தனிச் செம்மொழி என்பதன் பொருள் என்ன?**
பிறமொழிகள் பலவற்றிலும் தான் வழங்கும் பகுதியில்உயர்வும் தகுதியும் பெற்று பீடுற்று நிற்கும் மொழி உயர்மொழி பிறமொழிகளின் உதவியின்றித் தானே தனித்தியங்கும் தன்மையும் வன்மையும் பெற்றிருப்பது தனிமொழி. இலக்கிய வளமும் இலக்கணச் செம்மையும் பெற்றுத்திகழ்வது செம்மொழி. இம் மூன்று பண்புகளையும் பெற்றுள்ளமையால் தமிழ் உயர்தனிச் செம்மொழி.

**176. தமிழ் நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் தலைநிமிர்ந்து கர்ச்சிக்க வேண்டியது என்ன?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தமிழன் எனது மொழி தமிழ்மொழி. தமிழ் மக்கள் எல்லாம் என உறவினர். என் சமூகம் தமிழர் சமூகம் தமிழர் நலமே என் மதம். என் கடமை, தமிழ் நாட்டு ஊழியம்.

என் தெய்வம் தமிழணங்கு. என்மந்திரம் தமிழ்
(கவியோகி சுத்தானந்த பாரதியார்)

**177. தமிழுக்கு எப்படி மரியாதை சேர்ப்பது? யார் சேர்ப்பது?**
நாம் செய்கின்ற செயல்கள், நாம் நடக்கின்ற நடைகள், நாம் காயத்திற்குப் பயன்படுகின்ற முறைகள். இவையெல்லாம் சேர்ந்துதான் தமிழுக்கு மரியாதை சேர்க்க முடியும்.

**178. "தமிழ் உணர்ச்சி" என்ற ஒன்று எப்போது தோன்றியது?**
1857இல் கால்டுவெல் பெருமகனார் திராவிட ஒப்பிலக்கணத்தை எழுதிய பிற்பாடு

**179. உலகு தழுவிய தமிழ் ஆராய்ச்சிக்கு ஓர் அமைப்புத் தேவை என முதல் குரல் கொடுத்தவர் யார்?**
பண்டிதர் மூதறிஞர் கா.பொ.இரத்தினம் (1964)

**180. தமிழ் வளர்க்கும் பெரும் பொறுப்பு எதற்கு உள்ளது?**
பதிப்பகத்திற்கு (அச்சுத்துறைக்கு)

**181. தமிழ் இன்னியம் என்றால் என்ன? அவை எவை?**
தமிழனால் கண்டுபிடிக்கப்பட்ட இன்பமான கருவிகள்
01. மண்ணைப் பேச வைத்தான் தமிழன் - கடம்
02. நரம்பைப் பேச வைத்தான் தமிழன் - யாழ்
03. தோலைப் பேச வைத்தான் தமிழன் - பறை (தோற்கருவி)
04. மரத்தைப் பேச வைத்தான் தமிழன் - புல்லாங்குழல்
05. உலோகத்தைப் பேச வைத்தான் தமிழன் - தாளம்

**182. தமிழ் வரலாற்றில் சமதகிருதம் போல் தமிழும் ஒரு செம்மொழியே என்ற உரிமைக்கோரிக்கையை முதன் முதல் யாரால் எப்போது விடுக்கப்பட்டது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிதிமாற் கலைஞரால் (சூரிய நாராயண சாஸ்திரி) 1885

**183. பண்பாடு என்றால் என்ன?**

பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்

ஒரு இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், குறிக்கோள்கள், வாழ்க்கை முறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை, புறத்திணை, மரபுகள், அரசியலமைப்புக்கள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், உணவு முறைகள், பொழுது போக்கு, விளையாட்டுக்கள். என்பனவற்றை கூறலாம்.

**184. தமிழர் பண்பாட்டின் களஞ்சியங்களாகக் குறிப்பிடக்கூடிய ஐந்து நூல்களைக் குறிப்பிடுக?**

01. தொல்காப்பியம்
02. குறுந்தொகை
03. புறநானூறு
04. திருக்குறள்
05. சிலப்பதிகாரம்

**185. நமக்குத் தெரியாத மொழியில் இசையை அனுபவிக்க எண்ணுவது எதற்கு ஒப்பாகும்?**

மனைவியிடம் வக்கீல் வைத்துப் பேசுவதற்கு ஒப்பாகும். (கவிஞர் தாகூர்)

**186. ஆத்திகம் எது? நாத்திகம் எது?**

தமிழ் நாட்டுக்கோயில்களில் தமிழில் வழிபாடு இல்லை ஏன்? தமிழில் இலக்கிய வளம் இல்லையா? வேறு சிறப்புக்கள் இல்லையா? உலகில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு பக்திப்பாடல்களை ஆழ்வார்நாயன்மார்களின் அன்பு கனிந்த பாடல்கள் தமிழ் மொழியில் இருக்கும் போது ஏன் இந்தத் தவறு? ஊர் ஊராகச் சுற்றி ஆழ்வார்களும் நாயன்மார்களும் அன்பு கனிந்த பாடல்களை தமிழில் பாடி வைத்திருக்கும் போது அந்த நன்றியெல்லாம் மறந்து நன்றி கொன்ற மக்களாய் கோயிலில் தமிழில் வழிபாடு செய்யக் கூசுவதா? தாய்மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாத வடமொழியில் ஏன் வழிபாடு செய்ய வேண்டும்? தமிழில் வழிபாட்டை நடத்த முயல்வது ஆத்திகம்.

**187. தமிழ் நாடக நூல்கள் வெளிவருவதற்கு வழிகாட்டியாக அமைந்த நாடக நூல் எது? இதைப் பாடியவர் யார்?**

மனோன்மணியம், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

**188. வடபகுதியில் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்திற்கு முதன் முதல் விழா எடுத்தவர் யார்? தற்போது விழா எடுத்துவரும் நிறுவனம் எது?**

ஊர்க்காவற்றுறை நாடாளுமன்ற உறுப்பினர் வி.ஏ.கந்தையா, தற்போது ஆண்டுதோறும் மாணவர்களின் பரிசளிப்பு விழாவுடன் கோட்டங்களில் சுழற்சி முறையில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் நடாத்தி வருகின்றது. இதற்கு வித்திட்டவர். அதன் நிறுவனர் வே.இறைபிள்ளை. அத்துடன் இவரது முயற்சியால் பொறிக்கடவை அருள்மிகு கண்ணகி அம்மன் கோயில் அறங்காவலர் குழுவும் இரணைமடு அருள்மிகு கனகாம்பிகை அம்மன் கோயில் அறங்காவலர் குழுவும் சிலப்பதிகார விழாவை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

**189. இந்தியாவில் இசையில் தற்காலத்தில் வழங்கும் பண்களுக்கு ஆதியாக இருப்பது எது?**

தேவாரப்பண்கள்.

**190. மொழியைப் பொறுத்தவரை கொடுமையிலும் கொடுமை என்று எதைக்கூறலாம்?**

அறிவமுதை அள்ளித்தந்து சிந்தனைத்திறத்தை வளர்த்து வளம் படுத்திய தாய்மொழியைத் தெரிந்தவனாக மட்டும் இருந்து கொண்டு அதன் அளப்பரிய ஆற்றலை அறியாதவனாக இருப்பது தான்.

**191. எது தலை சிறந்த இலக்கியம்?**

இலக்கியம் எழுதப்பட்ட காலம் எதுவோ அக்காலத்தின் போக்கை முழுமையாக உணர்த்தும் இலக்கியமே தலை சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியமாக திறனாய்வாளர்களால் அங்கீகரிக்கப்படுகிறது.

**192. தலை சிறந்த எழுத்தாளர் யார்?**

தன் காலத்தை திறம்பட கதைக்கருவியின் மூலமோ பாத்திரங்கள் வாயிலாகவோ முழுமையாகச் சித்திரிக்கும் ஆசிரியனே தலை சிறந்த எழுத்தாளர்.

**193. முதல் செம்மொழி மாநாடு எங்கு நடைபெற்றது?**

புதுடெல்லியில் 2000ம் ஆண்டு புதுடில்லி தமிழ்ச் சங்கத்தால்
அதன் தலைவர்?
சாலை இளந்திரையன்

**194. தமிழ் முழுமையான தமிழாக வளமான தமிழாக இருக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு துறைகளில் தமிழ் விரிந்து பரந்து வளர வேண்டுமென்பதை ஞாயிற்றொடும் தாமரை இதழ்களோடும் ஒப்பிட்டுக் காட்டும் பழந் தமிழ்ப்பாடல் எது?**

ஓங்கல் இடை வந்
துயர்ந்தோர் தொழ விளங்கி
ஓங்கொலி நீர் ஞாலத்
திருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி
வெஞ்சுடரொன்றேனையது
தன்னேரிலாத் தமிழ்

**195. சங்க இலங்கியங்களில் இருந்து மிகச்சிறந்த மனிதநேயக் கூறுகளையும் உயர்ந்த எண்ணங்களையும் வெளிப்படுத்தும் சில பாடல்களைக் குறிப்பிடுக?**

01. யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா- கணியன் பூங்குன்றனார்

02. உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்....
அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலுமிலர் பிறர் அஞ்சுவதஞ்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்னமாட்சி அனைய ராகித்
தமக்கென முயலுநர் உண்மையானே.....

03. ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றால் அதனினும் உயர்ந்தன்று

04. நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.... (ஔவையார்)

05 நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்

**196. பன்னாட்டு எழுத்தறிவு நாள் எப்போது?**

புரட்டாதி -08

**197. மன்னார் - தமிழ்ச் செம்மொழி விழா எப்போது நடைபெற்றது?**

2010 ஐப்பசி 22,23,24,25ஆம் நாட்களில் மன்னார் தமிழ்ச்சங்கத்தினால் நடத்தப்பெற்றது.

**198. பன்னாட்டு தமிழ் எழுத்தாளர் மாநாடு எங்கே எப்போது நடைபெற்றது?**

இலங்கை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 2011 தை மாதம் 6,7,8,9ம் நாட்களில்.

**199. ஆறுவகை நிகண்டு நூல்களையும் அதன் ஆசிரியர்களையும் குறிப்பிடுக?**

01. சேந்தன் திவாரக நிகண்டு - திவாகரர்
02. பிங்கல நிகண்டு - பிங்கலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. சூடாமணி நிகண்டு -மண்டல புருர்
04. உரிச்சொல் நிகண்டு -காங்கேயர்
05. கயாதர நிகண்டு -கயாதர முனிவர்
06. ஆசிரிய நிகண்டு - ஆண்டிப் புலவர்

**200. வானவியலிலும், கடலியலிலும், கப்பலியலிலும் சிறந்து விளங்கிய தமிழன் உலகெங்கும் கப்பல் செலுத்தி வாணிகம் செய்தான். வடக்கே வடகடல் தாண்டி சீனா வரை சென்றான். மேற்கே மத்திய தரைக்கடல் தாண்டி மேற்கு ஐரோப்பா வரை சென்றான். கிழக்கே கம்போடியா வரையிலும் தெற்கே நியுசிலாந்து வரையிலும் சென்றான். இதற்கு ஆதாரச் சான்றுகள் எவை?**

01. பெல்சியத்தில் கிடைத்துள்ள தமிழ் எண்களைக் கொண்ட கடிகாரம்
02. பெய்யிங்கில் புதை பொருள் ஆய்வின் போது சீன தமிழ் எழுத்துக்கள் கொண்ட கல்வெட்டுக்கள்.
03. நியூசிலாந்து அருகில் கடலில் மூழ்கிக் கிடந்த கப்பலில் இருந்து கண்டெடுக்கப்பட்ட தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கப்பல் மணி

**201. சிலப்பதிகாரத்தை மும்மை காப்பியம் எனக்கூறுவது ஏன்?**

சிலப்பதிகாரத்தில் மூன்று என்னும் பிரிவு, மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

1. சிலம்பில் வலியுறுத்தப்பட்டும் பொருள் மூன்று. அவை அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்; உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்; ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்; என்பன.
2. சிலம்பின் தலைமைப் பாத்திரங்கள் மூவர்; கோவலன், கண்ணகி, மாதவி
3. சிலம்பில் முதன்மை கொள்ளும் சுவை மூன்று; இன்பச் சுவை, துன்பச் சுவை, வீரச் சுவை.
4. சிலம்பு குறிக்கும் வேந்தர் மூவர்; சோழன், சேரன், பாண்டியன்.
5. சிலம்பு நடைபெற்ற நாடுகள் மூன்று; சோழநாடு, பாண்டிய நாடு, சேரநாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சிலம்புக் கதை நிகழ்ந்த இடங்கள் மூன்று; புகார், மதுரை, வஞ்சி,
7. சிலம்பின் பெரும் பிரிவு மூன்று; புகார்க் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம்.
8. சிலம்பில் அமைந்த தமிழ் மூன்று; இயல், இசை, நாடகம். இவ்வாறு சிலப்பதிகாரம் மும்மைக் காப்பியமாகத் திகழ்கின்றது.

**202. சிலம்பின் சிறப்பு என்ன?**

1. தமிழ் மொழியில் முதன் முதலாகத் தோன்றிய பெருங்காப்பியம் இதுவே
2. அக்காலத்துத் தோன்றிய உலக இலக்கியங்கள் அரசனைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துப் போற்றின. அக் காலத்தில். குடிமக்களைக் காப்பியத் தலைவர்களாக அமைந்த சிறப்பினது.
3. பெண்மைக்கு முதலிடம் தந்து போற்றுவது.
4. வரலாற்றுப் பின்னணி கொண்டது.
5. சோழ, சேர, பாண்டிய நாட்டை இணைத்துத் தேசியக் காப்பியமாகத் திகழ்வது.
6. இயல், இசை, நாடகம் என்ற முப்பெரும் பிரிவுக்குச் சான்றாக விளங்குவது.
7. தமிழில் உரைநடை அமைந்திருந்தது என்பதற்குச் சான்றாய் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக ஒளிர்வது.
8. காப்பிய அழகு மிக்கது; கவிதை நலங்கள் சான்றது. இத்துணைச் சிறப்புமிக்க இக்காப்பியப் பெருமையை உணர்ந்த பாரதியார். "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" என்று வாய் மணக்கப் பாடியுள்ளார்.

**203. மணிமேகலை காப்பியத்தின் சிறப்பு என்ன?**

1. இளங்கோவடிகள் குலமகளான கண்ணகியைக் காப்பியத் தலைவி ஆக்கினார். இதனால், குலத்தால வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வு தாழ்வுகளை நீக்கிய புரட்சிக் காப்பியமாகப் பாராட்டப்பெறுவது சிலம்பு

2. பரத்தை,மது, கொலை, களவு முதலியன கூடா என்பதை மிக அழுத்தமாக மணிமேகலை கூறுகின்றது.
3. சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்க இயலும் என்ற உறுதிப் பாட்டினை விளக்கும் உயர்வுடையது.

4. பசிப்பிணியைப் போக்குவதே தலையாய அறம் எனப் பொதுவுடைமைத் தத்துவத்தின் ஆணிவேரை அறக் கொள்கையாக அமைப்பது.

5. சமயக் கொள்கைகளை விளக்குவதற்காகத் தமிழில் எழுந்த முதல் காப்பியம் என்ற பெருமையுடையது. சமயப் போராட்டத்தின் வித்து இங்கே முளைவிடுகின்றது எனலாம்.

6. சமயக் கொள்கைகளையும் சமுதாயச் சீர்திருத்தத்தையும் விளக்கத் தோன்றியது. ஆதலால் எளிய நடையில் இலங்குவது

7. புதிய புதிய சொல்லாக்கங்கள் தந்து தமிழை வளப்படுத்துவது.

8. ஆசிரியப்பாவால் இயன்றதாயினும் இசை இனிமை மிக்கது. இத்துணைச் சிறப்பு மிக்க இக்காவியத்தில், கதை நிகழ்ச்சிகளை முன்னிட்டு இயற்கை கடந்த கற்பனைகள் இடம் பெற்றுள்ளன; ஆயினும், அவை சலிப்பினைத் தரவில்லை.

சிலம்பும் மணிமேகலையும் தமிழ் நாயணத்தின் இரு புறங்களாகத் திகழ்கின்றன.

**204. பத்துப்பாட்டு நூல்களைப் பாடியவர் யாவர்? பாடப்பட்டோர் யாவர்?**

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

இவை பத்துப் பாட்டெனவும் மேல் கணக்கு நூல்கள் எனவும் படும்.

| நூலின் பெயர் | பாடினோர் | பாடப்பட்டோர் |
|---|---|---|
| 1.திருமுருகாற்றுப்படை (317 அடிகளையுடையது) | முதலாம் நக்கீரர் | குன்றமெறிந்த குமரவேள் |
| 2.பொருநர் ஆற்றுப்படை (248 அடிகள்) | முடத்தாமக் கண்ணியார் | சோழன் கரிகாலன் |
| 3.சிறுபாண் ஆற்றுப்படை (269 அடிகள் | நத்தத்தனார் | ஓய்மானாட்டு நல்லியக் கோடன் |
| 4.பெரும்பாண் ஆற்றுப்படை (500அடிகள்) | உருத்திரங் கண்ணனார் | தொண்டைமான் இளந்திரையன் |
| 5.முல்லைப்பாட்டு (103அடிகள்) | நப்பூதனார் | பாண்டியன் நெடுஞ் செழியன் |
| 6.மதுரைக் காஞ்சி (728அடிகள்) | மாங்குடி மருதன் | " " |
| 7.நெடுநல் வாடை (188 அடிகள்) | நக்கீரர் | " " |
| 8.குறிஞ்சிப் பாட்டு (261அடிகளை உடையது) | கபிலர் 1 | ஆரிய அரசன் பிர கத்தனுக்குத் தமிழர் நாகரிகம் அறி விக்க. |
| 9.பட்டினப்பாலை (311-அடிகள்) | உருத்திரங்கண்ணனார் | சோழன் கரிகாலன் 1 |
| 10.மலை படுகடாம் (583-அடிகள்) | பெருங்கவுசிகனார் | நன்னன்சேய் நன்னன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**205. எட்டுத்தொகை நூல்கள் யாவை? பாடிய புலவர்களின் எண்ணிக்கை என்ன? தொகுத்தவர் - தொகுப்பித்தவர்கள் யாவர்?**

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ(று)
ஒத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புறமென்(று)
இத்திறத்த எட்டுத்தொகை"

| நூலின் பெயர் | பாடிய புலவர்கள் எண்ணிக்கை | தொகுத்தவர் | தொகுப்பித்தவர் |
|---|---|---|---|
| 1.நற்றிணை நானூறு (400) 9 அடிமுதல் 12அடி வரைவழுதி | 175 | தெரியவில்லை | பன்னாடுதந்த பாண்டியன்மாறன் |
| 2.குறுந்தொகை 402 அகவற்பாக்கள் 4அடி முதல் 8அடிவரை | 205 | " | பூரிக்கோ என்கிற பாண்டியன் நல்வழுதி |
| 3.ஐங்குறுநூறு | 5 | கடலூர்கிழார் | யானைக்கடசேய்மாந் தரஞ்சேரல்இரும்பொறை |
| 4.பதிற்றுப்பத்து 100 தெரியவில்லை | 10 | | தெரியவில்லை |
| 5.பரிபாடல் 22 பாடல்களுடம் திரட்டும் | 13 | " | " |
| 6.கலித்தொகை 150 | 5 | நல்லந்துவனார் | தெரியவில்லை |
| 7.அகநானூறு 13அடி முதல் 37அடி வரை | 400 | உருத்திரசன்மனார் | உக்கிரப் பெருவழுதி |
| 8.புறநானூறு 400 | 160 | தெரியவில்லை | தெரியவில்லை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**206. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் யாவை? அவைகளைப் பாடியவர்கள் யார்?**

| நூலின் பெயர் பாடியவர் | பாடியவர் |
|---|---|
| 1.நாலடி 400 | தெரியவில்லை |
| 2.நான்மணிக்கடிகை | விளம்பி நாகனார் |
| 3.இனியவை நாற்பது | புதன்சேந்தனார் |
| 4.இன்னா நாற்பது | கபிலர் 1 |
| 5.கார் நாற்பது | மதுரைக் கண்ணன் கூத்தனார் |
| 6.களவழி நாற்பது | பொய்கையார் |
| 7.ஐந்திணை ஐம்பது | மாறன் பொறையனார் |
| 8.ஐந்திணை எழுபது | மூவாதியார் |
| 9.திணை மொழி ஐம்பது | கண்ணன் சேந்தனார் |
| 10.திணமாலை நூற்றைம்பது | கணி மேதையார் |
| 11.முப்பால் கடுகம் (திரிகடுகம்) | நல்லாதனார் |
| 12.ஆசாரக் கோவை | பெருவாயில் முள்ளியார் |
| 13.பழமொழி நானூறு | பாண்டியன் நாட்டைச் சார்ந்த முன்னுறை அரையனார் |
| 14.சிறுபஞ்ச மூலம் | காரியாசான் |
| 15.இன்னிலை | பொய்கையர் |
| 16.முதுமொழிக் காஞ்சி | மதுரைக் கடலூர் கிழார் |
| 17.ஏலாதி | கணி மேதாவியார் |
| 18.கைந்நிலை | புல்லங்காடனார் |

சிலர் 'முப்பால் கடுகம்' என்பதனை மூன்றுகடுகம் எனக் கொள்ளாது, 'முப்பால்' என்பது 'திருக்குறள்' என்று கொண்டு, கடுகத்தை வேறு நூலாகக் கொள்வர். அப்படிக் கொள்பவர், இன்னிலையையாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைந்நிலையையாவது விட்டு விடுவர். 'இன்னிலை' கைந்நிலை' என்ற இரண்டு நூல்களும் அச்சாகி வெளிவந்திருக்கிற அவைகளில் ஒன்றை ஒதுக்குவது பொருத்தமில்லை. "முப்பாற் கடுகம்" என்பதனை ஒரு நூலாகக் கொண்டால் முரண்பாடு ஒழியும் பொருத்தமும் அதுவே.

திருக்குறள் ஒரு தனித்தமிழ் நூல்-வேத நூல்-கீழ்க்கணக்கு-மேல்கணக்கு நூல்களில் சேராது. ஆதலின் அதனை விடுத்து மேலே கூறிய கூறிய 18நூல்களைக் கொள்ளுவதுதான் தகுதியானது.

**207. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைக் குறிக்கும் வெண்பாபாயாது?**

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுங் கோவை பழமொழி -மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

**208. பெருங்காப்பியங்கள் ஐந்தும் செய்தவர்கள் யாவர்?**

| நூலின் பெயர் | செய்தவர்கள் |
|---|---|
| 1.சிந்தாமணி | திருத்தக்க தேவர் |
| 2.சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| 3.மணிமேகலை | சீத்தலைச் சாத்தனார் |
| 4.வளையாபதி | தெரியவில்லை |
| 5.குண்டலகேசி | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**209. சிறு காப்பியங்கள் (ஐஞ்சிறு காப்பியம்) ஐந்தும் யாவை?**

செய்தவர்கள் யாவர்?

| | |
|---|---|
| 1.யசோதர காவியம் | தெரியவில்லை |
| 2.சூடாமணி | தோலா மொழித்தேவர் |
| 3.உதயண குமார காவியம் | கொங்குவேளிர் |
| 4.நாககுமார காவியம் | தெரியவில்லை |
| 5.நீலகேசி | ” |

**210. பன்னிரு திருமுறைகளின் பெயர்கள் யாவை? ஆசிரியர்கள் யாவர்?**

.பன்னிரு திருமுறைகள்

| திருமுறைப் பெயர் | ஆசிரியர் |
|---|---|
| 1.முதல் திருமுறை (தேவாரம்) | திருஞானசம்பந்தர் |
| 2.இரண்டாரம் திருமுறை (தேவாரம்) | “ |
| 3.மூன்றாம் திருமுறை (தேவாரம்) | “ |
| 4.நான்காம் திருமுறை (தேவாரம்) | திருநாவுக்கரசர் |
| 5.ஐந்தாம் திருமுறை (தேவாரம்) | “ |
| 6.ஆறாம் திருமுறை (தேவாரம்) | “ |
| 7.ஏழாம் திருமுறை (தேவாரம்) | சுந்தரர் |
| 8.எட்டாம் திருமுறை -திருவாசகம் | மாணிக்கவாசகர் திருக்கோவையார்) |
| 9.ஒன்பதாம் திருமுறை (திருவிசைப்பா - திருப்பல்லாண்டு) | 1.திருமாளிகைத் தேவர் 2.சேந்தனார் 3.கருவூர்த்தேவர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திருமுறைப் பெயர் | ஆசிரியர் |
|---|---|
| | 4.பூந்துருத்தி நம்பி காடநம்பி<br>5.கண்டராதித்தர்<br>6.வேணாட்டடிகள்<br>7.திருவாலி அமுதனார்<br>8.புருடோத்த நம்பி<br>9.சேதிராயர் |
| ஆக ஒன்பதின்மர் ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள் | |
| 10.பத்தாம் திருமுறை தமிழ் மூவாயிரம் (திருமந்திரம்) | திருமூல நாயனார் |
| 11.பதினோராம் திருமுறை | 1.திருவாலவாய் உடையார்<br>2.காரைக்கால் அம்மையார்<br>3.ஐயடிகள் காடவர்கோன் நாயனார்<br>4.சேரமான் பெருமாள் நாயனார்<br>5.நக்கீரதேவ நாயனார்<br>6.கல்லாட தேவ நாயனார்<br>7.கபில தேவ நாயனார்<br>8.பரண தேவ நாயனார்<br>9.இளம் பெருமான் அடிகள்<br>10.அதிரா அடிகள்<br>11.பட்டினத்துப் பிள்ளை யார்<br>12.நம்பியாண்டார் நம்பிகள் |
| 12.பன்னிரண்டாரம் திருமுறை திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்) | சேக்கிழார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**211.பதினான்கு சித்தாந்த நூல்களின் பெயர்கள் என்ன? ஆசிரியர்கள் யாவர்?**

| நூலின் பெயர் | ஆசிரியர் |
|---|---|
| 1.திருவுந்தியார | திருவியலார் உய்யவந்த தேவநாயனார் |
| 2.திருக்களிற்றுப்படியார் | திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் |
| 3.சிவஞான போதம் (பொழிப்பு உதாரணச் செய்யுட்கள் உள்பட) | நந்தியெம் பெருமானும் திரு வெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவரும் |
| 4.சிவஞான சித்தியார | அருணந்தி சிவாசாரியார் |
| 5.இருபா இருப∴து | ” |
| 6.உண்மை விளக்கம் | திருவதிகை மனவாசகங் கடந்தார் |
| 7.சிவப்பிரகாசம் | உமாபதி சிவாசாரியார் |
| 8.திருவருட்பயன் | ” |
| 9.வினா வெண்பா | ” |
| 10.போற்றிப் ப∴றொடை | ” |
| 11.கொடிக்கல்வி | ” |
| 12.நெஞ்சு விடுதூது | ” |
| 13.உண்மைநெறி விளக்கம் | ” |
| 14.சங்கற்ப நிராகரணம் | ” |

**212. பதினான்கு நூல்களையும் குறிக்கும் வெண்பா யாது?**

“உந்தி களிறு உயர் போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தவருட்
பண்பு வினா போற்றி கொடி பாசமில்லா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**213.பண்டார நூல்கள் என்றால் என்ன?**

பண்டாரம் என்றால் ஞான உக்கிராணம் என்பது பொருள். ஞான பாகத்தை மட்டும் கூறும் நூல்கள்.

| நூலின் பெயர் | ஆசிரியர் |
|---|---|
| 1.தசகாரியம் | அம்பலவாண தேசிகர் |
| 2.தசகாரியம் | தக்கிணா மூர்த்திதேசிகர் |
| 3.தசகாரியம் | சுவாமிநாத தேசிகர் |
| 4.சன்மார்க்க சித்தியார் | அம்பலவாண தேசிகர் |
| 5.சிவாச்சிரமத் தெளிவு | " |
| 6.சித்தாந்தப் ப.்.றொடை | " |
| 7.உபதேசப் ப.்.றொடை | தக்கிணா மூர்த்தி தேசிகர் |
| 8.பஞ்சாக்காரப் ப.்.றொடை | பேரூர் வேலப்ப தேசிகர் |
| 9.சித்தாந்த சிகாமணி | அம்பலவாண தேசிகர் |
| 10.உபாய நிட்டை வெண்பா | " |
| 11.நிட்டை விளக்கம் | " |
| 12.உபதேச வெண்பா | " |
| 13.அதிசய மாலை | " |
| 14.நமசிவாய மாலை | " |

இப் பண்டார நூல்கள் திருக்கயிலாய பரம்பரை மெய்கண்டார் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான பானுவாகிய நமசிவாய மூர்த்திகளை ஆதிகுரு மூர்த்தமாகக் கொண்டெழுந்த திருவாடுதுறை ஆழனத்துப் பண்டார சந்நிதிகளும் அவர் வழிப் பெரியார்களும் அருளிய ஞான நூல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**214.பின்வரும் நூல்கள் எக்காலத்தில் யாரால் செய்யப்பட்டவை?**

| நூலின் பெயர் | நூல் செய்யப்பட்ட காலம் | ஆசிரியர் |
|---|---|---|
| 1.இறையனார் அகப்பொருள் என்கிற களவியல் அடிகள் | கி.மு.16,000 | திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான் |
| 2.செங்கோன்தரைச் செலவு என்னும் புலவர் கோமான் | கி.மு.14,480 | தனியூர்ச் சேந்தன் |
| 3.தொல்காப்பியம் ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியனார் | கி.மு.6,000 | ஒல்காப் பெரும்புகழ் |
| 4.திருக்குறள் | கி.பி.25 | நெடுமாறன் வள்ளுவனார் (கி.மு.75 கி.பி 36) |

குறிப்பு- திருக்குறள் ஆசிரியரின் இயற்பெயர் நெடுமாறன் என்பது. பாண்டிய அரசரும் மாறன், நெடுமாறன் என்று பெயர். வைத்துக்கொள்வது உண்டு. வள்ளுவர் என்பது பட்டப்பெயர். இவரும் பாண்டியர் பரம்பரையினரேயாவர்.

**215. தொல்காப்பியம் செய்த ஆசிரியரின் இயற்பெயர் என்ன?**

அவருடைய இயற்பெயர் தெரியவில்லை. ஆரியப் புலவர்களும், ஆரியப் புலவர்களைப் பின்பற்றுவோரும், தொல்காப்பியரின் இயற்பெயர் திரணதூமாக்கினி என்றும், அவர் ஜெமதக்கினியின் புதல்வர் என்றும் கூறுவார்கள். இதற்கு அவர்களுக்கு ஆதாரம் கிடையாது.

இன்னொருசாரார் இவரது இயற்பெயர் புலத்தியர் என்பது என்றும், அப்பெயரையே வடமொழியாளர் திரண தூமாக்கினி என்று மொழி பெயர்த்துக் கொண்டார் என்றும் கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்+அகம்+தீயன் என்பதனை திரணம்+தூமம்+அக்கினி என்று மொழிபெயர்த்துக்கொண்டார் என்று கூறுவாரும் உளர்.

ஆரியர்கள் தென்னாட்டுக்கு வந்து சேர்ந்தபோது ஊர்ப்பெயர்களையும், மனிதர் பெயர்களையும், மற்றும் ஏனைய பெயர்களையும் வடமொழிப்படுத்தியே வழங்கியமை புராணங்களால் வெளியாம்.

**216. இறையனார் அகப்பொருள், தொல்காப்பியம் முதலியன நூல்கள் பாடப்பட்டபடியே உள்ளனவா? இடை நுழைப்பு உண்டா?**
பாடப்பட்ட படியே இல்லை இடை நுழைப்புக்கள் உண்டு.

**217. இடை நுழைப்பு யாரால் ஏற்பட்டவை?**
தமிழ் நன்றாய்க் கற்ற ஆரியப் புலவர்களால்

**218. இறையனார் அகப்பொருளில் உள்ள இடைநுழைப்புக்கள் எவை?**
அவையாவன:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆசிரியர் பாடியபடி சூத்திரங்கள் | இடைக்காலத்தில் மாறுதல் ஏற்பட்டபடி சூத்திரங்கள் |
|---|---|
| 1.அன்பின் ஐந்திணை கள: வெனப்படுமே (1)<br><br>அந்தணர் அருமறை மன்றம் எட்டனுள், கந்தருவ வழக்கம் என்மனார் புலவர். | அன்பின் ஐந்திணை களவெனப்ப படுவது, |
| 2.ஆம்பலும் அலரும் களவின் பாலதே, (22) | ஆம்பலும் அலரும் களவு. |
| 3.வெளிப்பட்ட பின்றைக் கிளவியும் உரிய (23) | வெளிப்பட்ட பின்றையும் உரிய கிளவி |
| 4.பகை தணிவினையே பாவ லர்க்குரித்தே (37) | வேந்துவினை இயற்கை பார் பார்க்கு முரித்தே. |
| 5.பாவலரல்லா ஏனையோர்க்கும புரைவதென்ப ஒரிடத்தான (38) | அரசரல்லா ஏனையோர்க்கும் புரைவதென்ப வோரிடத்தான். |
| 6.வேந்தர்குற்றுழி பொருட்பிணிப் பிரிவு, ஆங்கவ் விரண்டும் அனைவோர்க்குரிய (39) | வேந்தர்க் குற்றுழிப் பொருட் பிணிப் பிரிவென்(று) ஆங்கவிரண்டும் இழிந் தோர்க் குரிய |
| 7.காதற் பரத்தை இழிந்தோர்க்குரித்தே. (40) | காதற் பரத்தை எல்லார்க்கும் உரித்தே. |

குறிப்பு. இவ்விடை நுழைப்புக்கள் எல்லாம் எவரால் எக்காலத்தில் யாது காரணம் கருதி இயற்றப்பட்டன என்றும், அரசனும் ஏனைய புலவர்களும் ஐயங்கொள்ளாமல் அவைகளை உண்மைச் சூத்திரங்களாக நம்பும்படி செய்ய ஆரியப் புலவர் என்னென்ன செய்தார் என்பதையும் யாம் வெளியிட்ட " ஐந்திணை அகநூல் என்ற பதிப்பில் விரிவாகக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**219. தமிழ் நாணயத்தின் இரு பக்கங்களாக விளங்கும் காப்பியங்கள் எவை?**

1.சிலப்பதிகாரம் 2.மணிமேகலை

**220. முதல் நூல் நிலையத்தை தொடக்கிவைத்த நாடு எது?**

ரோமாபுரி. ரோம் நகரில் உள்ள பாதிரிமார்கள் தாம் முதன் முதலில் நூல்நிலையத்தை அமைத்தார்கள்.

**221. தமிழ்மக்கள் கண்டது எவை?**

இசை ஏழு - குரல் துத்தம், கைக்கிளை, இளி,உழை, விளரி, தாரம்.

சுவை ஆறு - இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு, உப்பு, உவர்ப்பு

நிலம் ஐந்து - குறிஞ்சி- மலையும் மலையைச் சார்ந்த இடமும் முல்லை - காடும் காட்டைச் சார்ந்த இடமும்
மருதம் - வயலும் வயலைச் சார்ந்த இடமும் நெய்தல் - கடலும் கடலைச் சார்ந்த இடமும்
பாலை - மணலும் மணலைச் சார்ந்த இடமும்

காற்று நான்கு

1. கொண்டல்- கிழக்கே இருந்து வருகின்ற காற்று
2. கோடை -மேற்கே இருந்து வருகின்ற காற்று
3. தென்றல் -தெற்கே இருந்து வருகின்ற காற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வாடை - வடக்கே இருந்து வருகின்ற காற்று

மொழி மூன்று- இயல், இசை, நாடகம் (எண்ணம், துணிவு செயல்)

இலக்கணம் இரண்டு: அகம், புறம்

ஒன்று - ஒழுக்கம். ஒழுக்கத்தை ஒன்றாகவே கண்டு மனிதனோடு சேர்த்து இணைத்துவிட்டார்கள்.

**222. இளமையில் கல்வி பயிலாத ஒரு மாணவன் முதுமையில் கதறி அழுது தன் தந்தையை வைது கூறி இருக்கின்றான். அப்பாடல் என்ன?**

அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னும்
ஆடையும் ஆதரவாய்க்
கொள்ளிக்கும் பட்டகடனுக்கும்
என்னைக் குறித்த தல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்திலே
என்றன் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே என்தந்தை
ஆகிய பெரும் பாதகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி நீடித்து நிலைத்து
இருக்க வேண்டும்
என்ற சிந்தனை ஒவ்வொரு தமிழனின்
நெஞ்சிலும் இருந்தால் மட்டும் தான்
தமிழ்மொழி நீண்ட காலத்திற்கு
நிலைக்கும். தாழ்வு மனப்பான்மையை
விடுத்து எங்கும் எதிலும் தமிழை
வளர்க்க முன்வர வேண்டும்.
இல்லையென்றால்
அழிந்து போன மொழிகளின்
பட்டியலில் தமிழ் இடம்
பெறுவது தவிர்க்க முடியாததாகும்.

வாணி கணனிப் பதிப்பகம் - வவுனியா. தொ.பே : 024 2223658.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org